இலவச வெளியீடு: GERMANY , ENGLAND மாசி .Feb.2018

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

1950 (68)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை



Tel:0231 162377

Königswall 16 (Am HBF) 44137 Dortmund Germany

Fax:0231 147836

## மருத்துவம், பொறியியல் துறைகளை ஆளும் தமிழர்கள்!

Dr IN



## Love - once or more ?

Happy Valentine's Day



தாயகத்தில் வெற்றிக்கனி பறித்த மாணவர்களுக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்!

பக்கம்-13



S.K.Silks & Gold Paraadise

மாபெரும் ராஜமுத்திரை

காதலர்தினத்தை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை!

10.02.2018-14.02.2018

அனைத்து ஆடைவகைகளும் 70 % வரை

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

செல்வராஜா

Selvaraja Gold House U.K

தங்க நகைகளுக்கும், மைங்கையர் மனங்கவர் சேலைகளுக்கும்,நாடுங்கள்.

Page.02

T.T.S.Brothers GmbH&Co.KG

Germany

RHEINISCHE STR 52 44137 DORTMUND Tel:0231 819288

Page.9

Gopara Gnanam

Textiles & Jewellery Shop

Germany

Tel: 0231/5450028- Mob: 01713306542

Rheinische Str.81-- 44137 Dortmund

# தமிழாய்ப்போன யேர்மன் மொழியும் புதிதாய் சேர்ந்த பேச்சுத் தமிழும்

## அவர் இப்பதான் இறங்கினவர்!

மாதவி





இலங்கையில் நாம் வாழ்ந்த காலத்தில் அங்கு வாழும் தமிர்கள் யாவரும் தமிழ் பேசினாலும். ஓவ்வொரு பிரதேசத்திற்கும் மொழிவழக்கு வேறுபாடு உண்டு. ஒருவர் உரையாடலில் இருந்தே அவர்களை யாழ்ப்பாணம் திருகோணமலை, மட்டக்களப்பு மலையகம் என பிரித்து அறிந்து விடலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் இந்தப் பெட்டை பெடியள் இப்ப உதவாது என்று சொல்வதில் வரும் பெட்டை (பெண் பிள்ளைகள்) பெடியங்கள் (ஆண்பிள்ளைகள்) கண்டறியாத கதை கதைக்காதை, சரியான விண்ணானமாய்க் கிடக்கு,(அதிசயம்) அத்துக்கு வந்திட்டு போகினம். நாய் வாசலுக்கை மூத்திரம் அடிக்குது ( சிறுநீர்) போக்கணம் கெட்ட கதை, சவுடால் விடாதை (சவால்) மப்புபோட்டு தெருவிலை விழுந்து கிடக்கிறான் (மதுபோதை) பள்ளிக்கூடம் (பாடசாலை) முச்சந்தியில் தறுதலைகள் (ஒன்றுக்கும் உதவாதவர்கள்) நிண்டு பெட்டையளை சுழட்டுதுகள் (சுழட்டுதுகள்- காதல் சேட்டைகள்) சேட்டை விடுகினம். நெருப்பு விலை சொல்லுறியள், வாத்தியார் பள்ளிக்கூடம் வராட்டி கொண்டாட்டம்தான். (வாத்தியர் - ஆசிரியர் ) வீட்டுக்குத் தூரம், வெளியாலை, பெண்களுக்கான மாதவிலக்கு) மடைச்சாம்பிறாணி (புத்தியில்லாதவன்) காடை கடைப்பிலி ( ஒழுக்க மற்றவர்கள்) நொண்டிச் சாட்டு ( உண்மையற்ற உறுதியற்ற சின்னச் சின்ன காரணங்கள்) இப்படி யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு அடுக்கிக் கொண்டே போகலாம்.

மட்டக்களப்பு பஸ்சை நித்தாடடுங்க ( நிறுத்துக) வெற்றிலை சப்பிறேன் (வெற்றிலைபோடுதல்) பத்தைக்குள்ள பண்டி ஒண்டு நிக்கிது. வச்ச பச்ச தென்னங் கண்ட அம்பதுறூவாக்கு வித்துபோட்டன்.

நேத்து வந்தன். நாளைக்கி வருவன். அந்த போட்ட சாவல் மிதிச்சு போட்டுது. சாகாம கிடந்தா மறுகா வருவன் எலுவா? எழுவாங்கரையில இருந்து படுவாங்கரைக்கு போவன். அவரு வாற அசுப்பு தெரியுது. ஒளும்பு... ஒய்யாரமா வெளிக்கிடு... ஓர்மைய்யா கதைக்கணும் புள்ள. இது பெரிய கக்கிசம். கடப்புகுள்ள நிக்கிற.... கொச்சிக்கா தூள். நாசமறுப்பு...எனக்கு ஒண்டுக்கும் ஏலாப்பா...ஒள்ளுப்பமா குடு. பைய பைய பொயித்துவா தம்பி. அவரு வருவாரு எண்டு நெனச்சித்து இரிக்கன். வெள்ளண போய் கருக்கலுக்க திரும்புவன். உசுப்பேத்தி உசுப்பேத்தி தொலைச்சுபோடுவானுகள் எலுவா? இண்டைக்கி, போயித்து நாளைக்கி வாறன். அவன்ட பொஞ்சாதியும் இவன்ட பொஞ்சாதியும் நல்ல ஒட்டு. சைக்கிள் ரோதைய உருட்டி வெளயாடுறான். (மட்டுநகர் பேச்சுத்தமிழ் உதவி அமுதநதி சுதர்சன்)

மலையகத்தில் அவங்க சொன்னங்க, அந்திக்கு சொல்லுறேன், (பிற்பகல் சொல்கிறேன்) சாதம் பினையிறேன் (சோறு குழைக்கிறேன்) அவளைக் கட்டிக்கப்போறேன். மிச்சம் பாரதி ராஜாவின் பாதிப்படம் பார்த்தாலே புரியும்.

இப்போ இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள். தாம் வாழும் நாட்டில் பல புது பேச்சு தமிழை உருவாக்கி உள்ளனர். இவற்றில் பல காரணப்பெயர்களாகவே அமைந்து இருக்கின்றன.

ஒருவர் வீட்டுக்கு நாம் முன்பு இலங்கையில் போவது என்றால் (நமது கிராமத்தை தாண்டி) ஒரு கடிதம் போட்டு விட்டுத்தான் செல்வோம். அப்படி போடாமல் சென்று அங்கு அவர்கள் வீட்டில் இல்லை என்றால்! பினர் அவர்களைக் காணும்போது அவர்கள் கூறுவார்கள் எழுதிப்போட்டு வந்திருக்கலாமே என்று.

அதேதான் யேர்மனியில் அடித்துப்போட்டு வந்திருக்கலாமே என்பார்கள். காரணம் இங்கு தொலைபேசியில் சொல்வதையே தொலைபேசி அடித்தல் என்கிறார்கள். அதனால் எழுதிப்போட்டு வந்திருக்கலாமே என்ற சொல் இங்கு அடித்துப்போட்டு வந்து இருக்லாம் என்றாகிறது. வருங்காலத்தில் மீண்டும் இங்கு எழுதிப்போட்டு வந்திருக்கலாம் என மாற வாய்ப்புண்டு காரணம் வட்சப்.

இலங்கையில் நண்பரைச் சந்திக்கச் சென்றால். வீட்டுகாரர் சொல்வார்கள்.- தம்பி இப்பதான் வேலைக்கு புறப்பட்டார் என்று. யேர்மனியில் இந்த சூழ்நிலையில் வரும் பதில். இப்பதான் இறங்கினவர். அதென்ன இறங்குதல். ஏன் கோழியா இரவு மரத்தில் படுத்துவிட்டு இறங்க.

யேர்மனியில் நாம் வந்த காலத்தில் தமிழர்கள் மாடிக் குடியிருப்பில்தான் வசித்தார்கள். எனவே அவர்கள் வேலைக்கு செல்வது என்றால் படியால் இறங்கத்தானே வேண்டும். அதனால் அவர் இறங்கியிட்டார் என்று சொல் இங்கு வாழும் மக்கள் மனதில் பதிவாகிவிட்டது.

இலங்கையில் நல்லாக் கொட்டிக்கிடக்கிறது என்றால் வேப்பமரத்தடியில் வேப்பம் பூவும், இலுப்பை மரத்தடியில் இலுப்ப பூவும் நன்றாக கொட்டிக்கிடக்கிறது என்று பொருள். அதனையே யேர்மனயில் இங்க நல்லாக் கொட்டிக் கிடக்கிறது என்றால் அது பனியைத்தான் ( சினோ) குறிக்கும்.

இன்று என்ன சாப்பாடு என்று கேட்டால் இன்று நேரம் இல்லை வெளியாலை என்பார்கள். வெளியாலை என்றால் அது மைக்டொனால் அல்லது வேறு உணவகமாகவோ இருக்கும். இதனையே இலங்கையில் அன்று கேட்டிருந்தால் அது அம்மா வீட்டில், மாமா வீட்டில்,அல்லது அக்காவிட்டில் என்று பதில் வந்திருக்கும்.

பாங்கால் வரும்போது அடிச்சுப்பாத்திட்டு வாங்கோ! இந்த அடி அர்தம். இங்கு வேறு ஒன்று. அதாவது சாசு எவ்வளவு அதன் வரவு செலவை பதிவுசெய்து தரும் தாழை மெசினில் அடித்து வரவும் என்று பொருள்.

5 நிமிடம் முந்தியே இறங்கிவிட்டது. அது என்ன இறங்கிவிட்டது என்றால் அது வேறு ஒன்றும் இல்லை விமானம் தரை இறங்குவதையே இறங்கிவிட்டது எனக்குறிப்பிடுவார்கள்.

இது தவிர யேர்மன் சொற்கள் சில தமிழாகிவிட்டன. எப்படி போத்துக்கீச மொழியான அலுமாரியும் பிக்கானும் தமிழானதோ போலன் மொழியான குசினியும் போல் இங்கு சுற்றுலா ஊர்லாப்பாகவும். வருத்தம் கிறங்காவும். விடுமுறை நாட்கள் பயற்ராக்காகவும் மாறிவிட்டது.

சர்வ சாதாரணமாக இங்கு தமிழ் அபிமானிகள் கூட பேசும் சொற்கள் இவை. கிறங்கடித்துவிட்டு நிற்கிறேன்.

பிள்ளைகள் வீட்டுக்குள் அடைபட்டுக்கிடக்கினம் இந்த வருடம் கட்டாயம் எங்கு என்றாலும் ஊர்லாப் போகவேண்டும்.

இந்தநேரம் வெளிக்கிடதையுங்கோ ஓட்டோபான் ஸ்ரவ்வாக இருக்கும். ( பெருந்தெரு வாகன நெரிச்சலாக இருக்கும்)

இப்படி தமிழோடு அலுமாரி, குசினி, யன்னல், பிக்கான் அப்புக்காத்து, கந்தோர் என்று இப்போ ஊர்லாப்,கிறங் இவையும் பின்னிப்பிணைகின்றன. அது மட்டுமன்றி பிரான்ஸ், டென்மாரர்க், இத்தாலி என பாலநாட்டுச் சொற்கலப்புகள் இன்னும் சேர இருக்கின்றன.






வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 257



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மைத்திரி செய்யப்போவது என்ன?

பாரதி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள்தான் என்று உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. இதன்படி, 2020 ஜனவரி 8ஆம் திகதியுடன் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுக்கு வருகிறது. அதாவது, இன்னும் இரு வருடங் களுக்குள் அவரது பதவிக்காலம் முடிவுக்கு வரப்போ கின்றது.

2015 இல் மைத்திரிபால ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது இருந்த அரசியலமைப்பு விதிகளின்படி அவர், ஆறு வருடங்களுக்குப் பதவியிலிருக்க முடியும். ஆனால், அவர் பதவியேற்ற சில மாதங்களில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத் தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில், தனது பதவிக்காலம் எதுவரை என்று உயர்நீதிமன்றத்திடம் கேள்வி எழுப்பி யிருந்தார். 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய, 2020 வரை மாத்திரமா அல்லது, 2021 வரை பதவியில் இருக்க முடியுமா என்பதே ஜனாதிபதியின் கேள்வியாக இருந்தது. உயர் நீதிமன்றத்தின் பதிலின்படி, மைத்திரியின் பதவிக்காலம் இன்னும் இரு வருடங்களில் முடிவுக்கு வரப்போகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்துப் பதவிக்கு வந்த மைத்திரிபூால சிறிசேன, தனது பதவிக்காலம் 5 ஆண்டுகளா, 6 ஆண்டுகளா என்று கேள்வி எழுப்பியதை சிவில் சமூக அமைப்புகளால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக விவாதிக்க உயர்நீதிமன்றம் நடத்திய விவாதத்தில், சட்டமா அதிபர் தவிர்ந்த மற்றைய தரப்புகள் எல்லாமே, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் தான் என்று வாதிட்டிருந்தன.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நான்கு ஆண்டுகளாகக் குறைப்பதாக வாக்குறுதி அளித்த மைத்திரிபால சிறிசேன வுக்குத் தனது பதவிக்காலம் 5 ஆண்டுகளா, 6 ஆண்டுகளா என்று கேள்வி எழுப்பும் தார்மீக உரிமை கிடையாது என்று பசில் ராஜபக்ஷ கூறியிருந்தார். உயர்நீதிமன்றத்திடம் தாம் விளக்கம் கோரிய விவகாரம் இந்தளவுக்கு சர்ச்சையாக வெடிக்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சற்றேனும் நினைத் திருக்கமாட்டார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடும் அதிகாரம், ஜனாதிபதிக்கு இருப்பதால், ஆறு ஆண்டுகள் பற்றிய பேச்சையே எடுத்துக் கொள்ளாமல் இந்த விவகாரத்தை முடித்திருக்கலாம். எவ்வாறாயினும், ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்தான் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்ட பின்னர், அடுத்த ஆண்டு, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியது தவிர்க்க முடியாத விடயமாக மாறியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரியின் பதவிக்காலம், 2020 ஜனவரி 08ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற நிலையில், அதற்கு ஒரு மாதம் முன்னதாக, 2019 டிசெம்பர் 08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளனதாக அரசிய லமைப்பு நிபுணர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதாவது, ஜனாதிபதிக்கான "கவுண்ட் டவுண்" ஆரம்பமாகிவிட்டது. அவரது பதவிக்கான நாட்கள் எண்ணப்படத் தொடங்கியுள்ளன.

கடந்து சென்ற மூன்று வருடங்களை விட, இனி வரப்போகும் இரண்டு வருடங்கள் ஜனாதிபதிக்கு சவாலான வருடங்களாக இருக்கும். இதில் முக்கியமானது, மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா? என்ற முடிவு. இரண்டாவது, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிறைவேற்றுவது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முடிவு. மூன்றாவது புதிய அரசியலமைப்பாக்க முயற்சிகளை முன்னெடுப்பதா இல்லையா என்ற முடிவு.



"நான் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன், இந்தப் பதவிக்காலம் முடிந்த பின்னர் வீட்டுக்குச் சென்று விடுவேன்" என்று மைத்திரிபால வாக்குறுதி வழங்கியிருந்தார். அந்த வாக்குறுதியை, மைத்திரிபால சிறிசேன காப்பாற்ற முனைந்தால், இலங்கை அரசியலில் மீண்டும் ராஜபக்ஷ குடும்பத்தின் கைகள் ஓங்குவது தவிர்க்க முடியாததாகி விடும். அதற்கு இடமளிக்கக்கூடாது என்ற நிலையில்தான் மைத்திரிதான் அடுத்த முறையும் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என அவரது ஆதரவாளர்கள் கூறிவருகின்றார்கள்.


தொடர்ச்சி 4ம் பக்கம்



சிவராத்திரி கட்டுரை .............

# சதா சிவனைத் துதித்து சதா சிவம் ஆவோம்.

**வி.உமாமகேஷ்வரக் குருக்கள்**



இறையருளால் நமக்கு கிடைத்தற்கரிய இம் மானிடப் பிறவி கிடைத்திருப்பது, நம்மை நாமே இறைவனாக மாற்றிக்கொள்ள வேண்டித்தான்.. இவ்வாறு நம்மை நாமே இறைவனாக மாற்றிக்கொள்ள நம் சமயத்தில் ஏதேனும் வழி இருக்கிறதா என கேட்போமாயின், மிக எளிமையான வழி உள்ளத்தே.... என்றுதான் நம் சமயம் நமக்குச் சொல்லும். அந்த வழியைத்தான் என்னவென்று நாமும் தேடுவோம்.

எந்தவொன்று நம்மைக் கடந்தும் நமக்குள்ளும் இருக்கிறதோ, அந்த ஒன்றைக் கடவுள் எனக் கொண்டால், அந்தக் கடவுள் நம்முள்ளும் குடியிருப்பதாகத்தானே பொருள் கொள்ள வேண்டும். நம் மானிடப்பிறவயில் உள்ள பிரட்சனை என்ன வென்றால், கடவுள் தன்மை உள்ள அதே இடத்தில், மிருகத்தன்மையும் குடியிருப்பதுதான். ஆக கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவையாகவே நம் மானிடப்பிறவி இருக்கிறது. இறைவனால் நமக்கு கொடையாக வழங்கப்பட்ட பகுத்தறிவின் துணைகொண்டு, இது தக்கது, இது தகாதது எனத் தரம் பிரித்து, நம்மிடையே இருக்கும் மிருக இயல்பினை கீழிருத்தி தெய்வ குணத்தை மேம்படுத்துவோமாயின் நாமே தெய்வநிலையை அடைந்துவிடுவோமே.

தெய்வ குணத்திற்கு அடிப்படை அன்பும் கருணையும். அவ்வாறான அன்பினையும் கருணையையும் நம் உள்ளத்தின் நிலையாக நிறுத்திவிட்டால், அகம் ப்ரும்மாஸ்மி அதாவது நமே கடவுளாகி விடலாமே. இதனையே அறுதியிட்டுச் சொல்கிறது மந்திரம். அதுவும் சாதாரணமான மந்திரமல்ல திருமந்திரம். அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிணார் அன்பும் சிவமும் ஒன்றென்று யாரும் அறிகிலார் அன்பும் சிவமும் ஒன்றென்று அறிந்தபின் அன்பே சிவமாக அமர்ந்து இருந்தாரே.

அப்படியான அன்பை இந்நன்நாளில் எந்தப் புள்ளியிலிருந்து தொடங்குவத்து? நான் நீ எனப் போட்டியிடாமல், நாம் என்று முதலில் சொல்லிப் பழகுவோம். நானும் நீயும் நாமுமானால் நம்மிடையே பகை மறைந்து பரிவு மலருமல்லவா. அந்தப் பரிவின் பரிமாணம் சக மனிதர்களிடமே மட்டும் தங்காமல், மானிலத்து மற்ற உயிர்களிடத்தும் பரவுதல் வேண்டும்.

குறிப்பாக நம்மை நம்பி நம்மிடையே வாழும் உயிர்களை உணவிற்கென கொன்று தின்பதனை இனிவரும் காலத்திலாவது தவித்திடல் வேண்டும். இந்த இடத்தில் மகாத்மா காந்தியடிகள் சொன்னதைக் கொஞ்சம் காதில் போட்டுக்கொள்வோமே. அன்னல் சொல்கிறார் ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய வாழ்நாளில் என்றேனும் ஒர்நாள் ஏதேனும் ஒரு காரணம் கொண்டு புலால் உண்பதனை அறவே நிறுத்திடல் வேண்டும் என்றார்.

## கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்

தெய்வப் புலவர் திருவள்ளுவரோ கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என்று தன் குரலில் குறளாக நமக்குத் தருகிறார். வள்ளல் பெருமானோ அதற்கு ஒருபடி மேலே நின்று வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன் என மனமுருக பாடுகிறார்.

இதையெல்லாம் மனதிலிருத்தி வருகின்ற சிவராத்திரி நன்நாளில் திருமூலரின் அருள்வாக்கான

சிவ சிவ என்கிலார் திவினையாளர்
சிவ சிவ என்றிட தீவினை மாளும்
சிவ சிவ என்றிட தேவரும் ஆவர்
சிவ சிவ என்றிட சிவ நிலை தானே.

என்கின்ற திருமந்திரச் சொல்லில் சிவ சிவ என்கின்ற மஹா மந்திரத்தினை மனதார அன்புடனும் அமைதியுடனும் மனமுருகி ஜெபித்து, இம்மானிலத்து மன்னுயிர்கு எல்லாம் பயனுறச் செய்து பேரின்ப் பெருவாழ்வை வாழ்வோமாக.

---

03ம் பக்கத் தொடர்ச்சி

# அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மைத்திரி செய்யப்போவது என்ன?

கோட்டாபய ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கும் ஆர்வம் கூட்டு எதிரணியிடம் உள்ளது. அவரை எதிர்கொள்ளக் கூடிய, ஒரே நபராக மைத்திரிபால சிறிசேனவே இருக்கிறார். அதேவேளையில் கடந்த தேர்தலில் மைத்திரியின் வெற்றிக்கு ஐ.தே.க.வின் வாக்குகளே பிரதான காரணமாக இருந்தன. அதனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்க வேண்டும் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் வியூகம் வகுத்துச் செயற்படுகின்றார்.
ரணில், கோதாபாய, மைத்திரி என மும்முனைப்போட்டியொன்று ஜனாதிபதித் தேர்தலில் வருமானால், மைத்திரி மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்படக்கூடிய ஆபத்தும் இருக்கின்றது. பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் முடிவுகள் அடுத்த கட்டம் எவ்வாறு அமையும் என்பதை ஓரளவுக்கு வெளிப்படுத்தலாம்.

மைத்திரியிடம் இன்று மிகவும் சக்திவாய்ந்த ஆயுமாக இருப்பது இரு விசாரணைக் குழுக்களின் அறிக்கைதான். ஒன்று பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கை. இதில் ஐ.தே.க.வினரே சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். இரண்டாவது, மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கை. இந்த இரண்டையும் அவர் பயன்படுத்தலாம். ஊழல் மோசடிகளுக்கு எதிரானவர் என்பதைக் காட்டிக்கொள்வதன் மூலம் தனது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முடியும். அதனைவிட, தனக்கு அச்சுறுத்தலாகவுள்ள இரு தரப்புக்களின் ஆதரவுத் தளத்தையும் ஆட்டங்காணச் செய்யமுடியும்.

இதன் மூலம், இன்னொரு பதவிக்காலத்துக்கு அவர் போட்டியிட வேண்டும் என்ற ஆர்வம் மக்கள் மத்தியில் உருவாகும். இதனைவிட, இனநெருக்கடிக்கான தீர்வையும் உள்ளடக்கிய அரசியலமைப்பு மாற்றத்தை இந்த இரு வருடங்களுக்குள் அவர் முன்வைத்தால் அவரது செல்வாக்கு சிறுபான்மையினர் மத்தியிலும் உயரும். வரலாற்றிலும் ஒரு தனியான இடம் அவருக்குக் கிடைக்கும். மைத்திரி என்ன செய்யப்போகிறார்.




ESTM Jewellery Dortmund

எங்கள் சேவை
- திருமண ஆபரணங்கள்
- ஒடர் நகைகள்
- திருத்த வேலைகள்
- தாலிக்குப் பொன்னுருக்குதல்
- காது பூக்குக்குத்துதல்

Our Service
- Wedding Jewellery
- Jewellery Order
- Quick Repair of Jewellery
- Wedding Rituals
- Ear and Nose piercing

பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்

ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642




Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
Special
PRICE
SUMMER 2018
BOOK EARLY AND SAVE
01.07. bis 13.07.2018
Abflug
669 €
40 Kg
ab.15.07.2018 699 €
April-Mai 570€
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
e.mail:siva 0108 @hotmail.com
Mob:No: 0179 1484 892
QATAR
Emirates
OMAN AIR
Allee Str.38-40a
44793 Bochum
Graphic Design Vettimainy Ltd



அறிமுகம்
ரியல்
சுவை
TM
டின் மீன்
அடடா !
இது தான் சுவை...
SUVAI
JACK MACKEREL
REAL
SUVAI
TM
JACK
MACKEREL
IN NATURAL JUICE WITH SALT ADDED
ஜேக் மெக்கரல்
ரியல்
சுவை
TM
JACK
MACKEREL
IN TOMATO SAUCE
JACK MAKRELEN TOMATENSOSSE - SAUREL SAUCE TOMATE
ஜேக் மெக்கரல்
தேர்ந்தெடுக்கப்பட்ட
சுவையான சிலி நாட்டின்
ஜேக் மெக்கரல் டின் மீன்
இரு சுவைகளில்
இப்பொழுது ஐரோப்பா
முழுவதும் அறிமுகமாகிறது...
OMEGA 3
RICH
A quality
product
of Chile
ALL RIGHTS
COPYRIGHT
RESERVED
For trade enquires: ADCHAYA INTERNATIONAL | Alter Hellweg 108, Halle No.8, 44379
Dortmund, Germany. Tel: +492311391030 | +4917663092804 | www.anjaara.com



அதிசய உலகம்

# அடுத்த தலைமுறையை ஆழப்போகும் நானோ அறிவியல்!

நானோ அறிவியல் கண்ணுக்குத் தெரியாத தொழில்நுட்பமும் அதன் பிரம்மாண்டமான விளைவுகளும்




நாம் வாழும் இந்த நவீன உலகில், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது அடுத்தடுத்து மிகக் குறுகிய காலத்தில் நடை பெற்று வருகின்றது. இவ்வுலகையும், மனிதர்களாகிய நம்மையும், நமது வாழ்க்கை முறையையும் மாற்றி அமைத்த 20ம் நூற்றாண்டின் தொழில்நுட்பங்கள் என்றால் அந்த வரிசையில் தானுந்து (car) விமானம் (flight), மின்னணுவியல் (electronics), வானொலி (radio), தொலைக்காட்சி (television), கணினி (computer), தொலைப்பேசி (telephone), விண்கலம் (spacecraft), இணையம் (internet) என்று சொல்லிக் கொண்டே போகலாம். இந்தத் தொழில்நுட்பங்கள் இல்லாமல், நமது இன்றைய வாழ்க்கையைக் கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாது.

சரி, இது எல்லாமே 20ம் நூற்றாண்டின் மாபெரும் தொழில்நுட்பங்கள் என்றால், 21ம் நூற்றாண்டின் தொழில்நுட்பம் என்று கூறப்படுவது எது? அது எதுவாக இருக்கலாம் என்று நீங்கள் எங்கு தேடிப் பார்த்தாலும், அதைக்,



Dr.நிரோஷனின்


கண்டிப்பாக உங்கள் கண்களால் காணப்போவதே இல்லை. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? அது உங்கள் கண்களுக்குத் தெரியாத அளவிற்கு மிகவும் சிறிதான தொழில்நுட்பமாகும்.

என்ன புரியவில்லையா...? பரவாயில்லை, இதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். உங்கள் வீடுகளில் உள்ள ஜன்னல்களைக் கழுவி சுத்தம் செய்வதில் உயிரே போய் விடும் அல்லவா? இதுவே அந்த ஜன்னல்கள் தன்னைத் தானே சுத்தம் செய்துகொண்டு இருக்கும் என்றால், எப்படி இருக்கும்?


சரி, இது ஒரு பக்கம் இருக்கட்டும், இன்னும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். கட்டடங்களை அமைப்பதற்கு பெரும்பாலும் உபயோகிக்கப்படும் ஒரு உலோகம் உருக்கு ஆகும். இந்த உருக்கை கலப்புலோகம் என்றும் கூறுவார்கள், ஏன் என்றால் அது இரும்பை ஒரு முக்கிய பாகமாகக் கொண்டிருக்கின்றது. உருக்கு மிகவும் பலமாக இருப்பதால் தான் அதை இன்று காணக்கூடிய மாபெரும் கட்டடங்களைக் கட்டுவதற்குக்கூட பயன்படுத்துகின்றார்கள். ஆனால் இதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள், இந்த உருக்கை விட 100 மடங்கு பலம் கூடிய ஒரு உலோகத்துடன் கட்டடங்களை அமைக்கலாம் என்றால், எப்படி இருக்கும்?

இது என்ன திரைப்படங்களில் வரும் அறிவியல் புனைவு கதைகள் போல் இருக்கின்றதா? இல்லவே இல்லை! இது எல்லாம் ஏற்கனவே நமது உலகில் காணக்கூடிய மற்றும் எதிர்காலத்தில் நாம் அனைவருமே அனுபவிக்கப் போகும் நவீன தொழில்நுட்பம். 21ம் நூற்றாண்டிலும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எல்லையே இல்லாமல் இருக்கப் போகிறது. அதற்கு மூலகாரணங்களில் ஒன்றாக இருந்து மனித வாழ்க்கையைத் தலை கீழாகப் புரட்டிப்போட இருக்கப் போவது நானோ தொழில்நுட்பம் ஆகும்.

நானோ தொழில்நுட்பமா? அப்படி என்றால்? இதற்கு முதலில் நானோ என்றால் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். இந்த நானோ எனும் வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து வந்தது. அதை மொழிபெயர்த்தால் சிறிது என்று அர்த்தம் வரும். என்ன தான் இந்த வார்த்தைக்குச் சிறிது என்று அர்த்தம் இருந்தாலும், நானோ தொழில்நுட்பம் கொஞ்சம் கூடச் சிறிய ஒரு விஷயமே கிடையாது. உண்மையில் சொல்லப்போனால் நானோ தொழில்நுட்பம் தான் 21ம் நூற்றாண்டின் அடிப்படை தொழில்நுட்பமாக இருக்கப் போகின்றது. ஒரு கிலோமீட்டர் எவ்வளவு தூரம் என்பதை உங்கள் எல்லோராலும் கற்பனை பண்ணிப்பார்க்க முடியும், சரி தானே? அதே போல் ஒரு மீட்டர் அல்லது ஒரு சென்டிமீட்டரையும் இலகுவாகக் கற்பனை பண்ணிப்பார்ப்பீர்கள். இதுவே ஒரு மில்லிமீட்டர் என்று வரும் போது, அதைக் கற்பனை பண்ணிப்பார்ப்பது சற்றுக் கடினமாக இருக்கலாம், ஆனால் அதையும் கூட ஓரளவு கற்பனை பண்ண முடிகின்றது. ஆனால் அதை விடச் சிறிதாக இருக்கும் அனைத்து அளவுகளையும் மனிதர்கள் ஆகிய நம்மால் இலகுவாக சிந்தித்துக்கூட பார்க்க முடியாது.

SANGEETHA JEWELLERS

"Specialist in 22 ct Gold Jewellery UK"
MONTHLY SEETU FACILITIES
ONSITE WORK SHOP REPAIRS AND
ALL OTHER NEEDS
EXCHANGE YOUR OLD FOR NEW JEWELLERY
தங்கத் தாரகைக்கு
ஓர் தாலிக்கொடி
Tel:020 8902 9246
FOLLOW US ON . I INSTAGRAM I FACEBOOK
#SANGEETHA JEWELLERS
"PRICE GURANTEE ON THE DAY OF PURCHASE"
190 EALING ROAD,ALPERTON,WEMBLEY,HA0 4QD - U.K
" TERMS AND CONDITION APPLY"

சங்கீதா நகையகம்



இருந்தும் ஒரு மில்லிமீட்டரை ஆயிரத்தால் வகுத்தால் கிடைப்பது ஒரு மைக்ரோமீட்டர். இதே ஒரு மைக்ரோமீட்டரை மீண்டும் ஆயிரத்தால் வகுத்தவுடன் கிடைப்பது தான் ஒரு நானோமீட்டர். எனவே ஒரு மீட்டரை 1,000,000,000 ஆல் வகுக்கும் போது வரும் மிகச்சிறிய அளவைத்தான் ஒரு நானோமீட்டர் என்று அழைக்கின்றோம். இவ்வாறான ஒரு அளவை நம்மால் கற்பனைகூட பண்ணிப் பார்க்க முடியாது, ஆனால் இதற்கும் நானோ தொழில்நுட்பத்துக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது?

நானோமீட்டர் அளவுகளில் செய்யப்படும் ஆராய்ச்சி மற்றும் அதே அளவுகளில் உருவாக்கப்படும் தொழில்நுட்பத்தை நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் என்றும் அழைக்கின்றோம். சுருக்கமாகச் சொல்லப் போனால், நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் நமக்கு நன்றாகவே தெரிந்த விஷயங்களில் ஒருசில அணுக்களைச் சேர்க்கும் போது, நமக்குத் தெரிந்த அந்த விஷயங்கள் கூட புதுப்புது பண்புகளைப் பெற்று நமக்கு பெரும் நன்மைகளைத் தந்துவிடுகின்றன. இது தான் நானோ தொழில்நுட்பம் ஆகும். என்ன புரியவில்லையா?
சரி, இதற்கு ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம். நான் ஆரம்பத்தில் கூறியது போல் ஜன்னல்கள் தன்னைத்தானே சுத்தம் செய்தால் எவ்வளவு இலகுவாக இருக்கும், அல்லவா? நானோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் இவ்வாறான ஜன்னல்களை ஏற்கனவே உருவாக்கி விட்டார்கள். ஜன்னல் கண்ணாடிகளில் தைட்டானியம் டையாக்சைட் (titandioxide) அணுக்களைச் சேர்த்தால் போதும், அந்தக் கண்ணாடிகளில் சூரிய ஒளி படும்போது, அது தன்னைத்தானே சுத்தம் செய்து கொள்கிறது. இந்தக் கண்ணாடிகள் தற்போது உலகில் பல்வேறு இடங்களில் பாவனையில் உள்ளது. உதாரணமாக ஜப்பான் நாட்டில் காணப்படும் ஒரு விமான நிலையத்தின் கட்டடத்தின் அனைத்து ஜன்னல்களும் இந்த தைட்டானியம் டையாக்சைட் சேர்க்கப்பட்ட கண்ணாடிகள் ஆகும்.



நானோ ஆராய்ச்சியில் உள்ள வியப்பான விஷயம் என்ன தெரியுமா? இந்த ஆராய்ச்சி பல்வேறு துறைகளில் நடாத்தப் பட்டு வருகின்றது. அதில் மருத்துவமும் ஒன்றாகும். உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் தற்போது நாம் என்ன செய்வோம்? உடனடியாக மருத்துவரிடம் சென்று அவர் தரும் மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டு, நோய் போய்விடும் என்கின்ற நம்பிக்கையில் இருப்போம், சரி தானே?

ஆனால், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்த நிலைமை முற்றிலும் மாறி விடும். உங்கள் மருத்துவர் உங்களுக்கு மருந்து மாத்திரை ஒன்றும் தரவே மாட்டார்! அவர் நானோ தானியங்கி (Nano Robot) என்று அழைக்கப்படும் மிக மிக நுண்ணியமான எந்திரங்களை உங்கள் உடலுக்குள் அனுப்பிவிடுவார். இந்த நானோ தானியங்கிகள் உங்களது இரத்தக் குழாய்களூடாகச் சென்று உங்கள் நோய்க்குக் காரணமாக இருக்கும் பாக்டீரியா மற்றும் வைரஸ்களைக் கண்டுபிடித்து அழித்து விடும். அது மட்டும் இல்லை! புற்றுநோய், மாரடைப்பு, சிறுநீரக கற்கள், எய்ட்ஸ் போன்ற எண்ணற்ற நோய்களையும், ஏன் இன்று வரை எவ்விதமான சிகிச்சை முறைகளுமே இல்லாத நோய்களையும் கூட குணப்படுத்த இந்த நானோ தானியங்கிகள் உதவும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.
ஆனால், இதில் உள்ள அதிசயம் என்ன தெரியுமா? ஒரு நானோ தானியங்கியின் அளவு வெறும் 0.000000001 மீட்டர் மட்டுமே தான் இருக்கும்! ஒரு தலைமுடியின் அகலத்துடன் ஒரு நானோ தானியங்கியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒரு நானோ தானியங்கி சுமார் 100,000 மடங்கு சிறிதாக இருக்கும்! எனவே, நமது கண்களாலே பார்க்கமுடியாத இந்த எந்திரங்கள் மனிதனின் உயிரைக் காப்பாற்றப் போகின்றன என்பதைக் கேட்கவே அதிசயமாகத் தானே இருக்கிறது?

மருத்துவத் துறையை முற்றிலும் மாற்ற இருக்கும் இந்த நானோ தொழில்நுட்பம், நாம் பயணிக்கும் முறையையும்கூட மாற்ற இருக்கின்றது, அது எப்படித் தெரியுமா? விடுமுறைக்கு பொதுவாக எங்கே போவோம்? நாம் வசிக்கும் நாட்டில் இருக்கும் ஒரு ஊருக்கு அல்லது வெளிநாடுகளுக்குச் செல்வோம், சரி தானே? ஆனால், எப்பொழுதாவது விண்வெளிக்குப் போகலாம் என்று யோசித்துப் பார்த்து இருக்கின்றோமா? இல்லை தானே? ஆனால், எதிர் காலத்தில் விடுமுறைக்கு விண்வெளிக்கும் போகச் சிந்திப்போம் என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். நீங்கள் நினைப்பது போல் ராக்கெட்டில் பயணிப்பதில்லை! இதற்கென்றே ஒரு உயர்த்தியை (elevator) அமைக்க இருக்கின்றார்கள்! இந்த உயர்த்தியுடன் பூமியின் தரையில் இருந்து 80,000 கிலோமீட்டருக்கு மேல் நோக்கிச் சென்று, மறுபடியும் புவியை நோக்கி வரலாம்.

நீண்ட காலமாக இப்படி ஒரு உயர்த்தியைக் கட்டுவதற்கு சாத்தியமே இல்லை என்று எண்ணினார்கள். அதுவும் நியூட்டனின் இயக்க விதிகளின் அடிப்படையில் இந்த உயர்த்தியை இயக்க உதவும் கேபிள்கள் அறுந்து விடும் என உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், நானோ ஆராய்ச்சிப் படி கார்பன் நானோகுழாய்களின் (Carbon nanotubes) உதவியுடன் இந்தத் திட்டத்தை செயல்படுத்தமுடியும் என்று ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரியவந்தது. இந்தக் கார்பன் உள்ள விசேஷம் என்ன தெரியுமா? இவை கலப்புலோகம் ஆகிய உருக்கை விட 100 மடங்கு பலமாகவும் அதே நேரத்தில் ஆறு மடங்கு கனம் குறைவாகவும் இருக்கின்றன. தற்போது விஞ்ஞானிகளால் ஒரு சில சென்டிமீட்டர் கார்பன் நானோகுழாய்களைத் தான் உருவாக்க முடிந்தது. ஆனால், கொஞ்சக் காலம் கடந்து 2070ம் ஆண்டிற்குப் பின்பு, இப்படி ஒரு உயர்த்தியை நிச்சயம் உருவாக்க முடியும் என்பதைக் கூறியிருக்கிறார்கள். எனவே, „வா மச்சான் விண்வெளிக்குச் சென்று ஒரு காப்பி குடித்துவிட்டு வருவோம்“ என்று எதிர்காலங்களில் கேட்கத்தான் போகிறார்கள். ஆனால், நாங்களும் அதே போலக் கேட்பதற்கு 2070ம் ஆண்டில் இருப்போமா என்று தான் தெரியவில்லை. இதற்குக் காலம் தான் பதில் சொல்லப் போகின்றது.
நானோ தொழில்நுட்பத்தின் ஒரு சில விசேஷங்கள் தான் இவை. உண்மையில் சொல்லப்போனால் நானோ அறிவியல் ஊடுருவிச் செல்லாத துறையே கிடையாது. ஆகவே, ஒரு திரைப்படம் வர முன் வெளியிடப்படும் முன்னோட்டம் போல் தான் நானோ அறிவியலின் இன்றைய இந்தப் புதுமையான நவீன கண்டுபிடிப்புகளும் கூட. ஆனால் எதிர்காலத்தில் நானோ அறிவியலின் மற்றும் நானோ தொழில்நுட்பத்தின் உதவியுடன், இன்று நம்மால் கற்பனையே பண்ண இயலாத எவ்வளவோ விசித்திரமான கண்டுபிடிப்புகள் நம்மை வியக்க வைப்பது மட்டும் அல்லாமல், நம்மையும், நமது வாழ்க்கை முறையையும் அடியோடு மாற்றப் போகின்றன என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. எனவே, பொறுத்திருந்து பார்ப்போமா?
இனி நீங்கள் கூறுங்கள்! நானோ தொழில்நுட்பத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? இதற்குரிய பதிலை மட்டுமில்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!



Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன். சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de




# வாழ்க்கையின் பருவங்கள்

"உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு. பிறப்புக்கு ஒரு காலம், இறப்புக்கு ஒரு காலம் நடவுக்கு ஒரு காலம், அறுவடைக்கு ஒரு காலம் கொல்லுதலுக்கு ஒரு காலம், குணப்படுத்தலுக்கு ஒரு காலம் ..." என பேசுகின்ற சபை உரையாளர் "கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார் காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார்" ( சபை உரையாளர் 3 : 1 ..10) என்கிறார். இதை விவிலியம் பதிவு செய்கிறது.
பூமி இப்படி இளமையாகவும், வளமையாகவும் இருப்பதற்குக் காரணம் இந்த பருவ மாற்றங்களே என்கிறது விஞ்ஞானம். நமக்காய் இந்த பூமியைப் படைத்த இறைவன் நமது வளமையான வாழ்வுக்காய் பருவங்களைத் தந்திருக்கிறார்.
மனித வாழ்க்கையிலும் பல்வேறு காலங்கள் வந்து செல்கின்றன. சிரிப்பின் வீதிகளில் நடமாடும் காலம், அழுகையின் கரையில் அடைபடும் காலம், உற்சாகத்தின் ஊஞ்சலில் ஆடும் காலம், சோர்வின் படிக்கட்டில் அமரும் காலம் என வாழ்க்கையின் பருவங்கள் அனுபவங்களை அள்ளித் தருகின்றன.

இறைவன் படைத்த இந்த உலகில் நான்கு பருவங்கள் பொதுவானவையாக இருக்கின்றன. வசந்த காலம், இலையுதிர் காலம், வேனிற் காலம், குளிர் காலம் என இந்த நான்கு காலங்களைச் சொல்லலாம்.

மனித வாழ்க்கையையும் ஆன்மீக வெளிச்சத்தில் இந்த நான்கு பருவங்களுக்குள் அடக்கி விடலாம். மழலைக்காலம் எனும் வசந்த காலம், பதின்வயதுக் காலம் எனும் இலையுதிர் காலம், இளமைக்காலம் எனும் வேனிற்காலம், முதுமைக்காலம் எனும் குளிர்காலம் ! அதெப்படி ?

1. வசந்த காலம் !

வசந்த காலம் என்பது மகிழ்ச்சியின் காலம். துயரங்களைப் பற்றிய சிந்தனையின்றி மரங்கள் வண்ண ஆடை உடுத்தி, கிளையசைத்து, இலை சிரிக்க நம்மை வரவேற்கும் கால்ம். உற்சாகத்துக்குப் பஞ்சம் இல்லாத காலம் இது !
நமது மழலைக்காலம் இந்த வசந்த காலம் போன்றது. கவலைன்னா என்ன என்று கேட்கின்ற காலம். இருப்பதைக் கொண்டு இன்புற்று வாழும் காலம். இறைவனின் ஆசீரை நிறைவாகப் பெற்று களித்திருக்கும் காலம். பெற்றோரின் விரல்பிடித்து நடந்து, எந்த பிரச்சினைகளும் இல்லாலம் திரிகின்ற காலம்.
ஆன்மீக வாழ்க்கையில் இறைவனை அறிகின்ற காலம் இது ! இறைவனிடம் வருகையில் கிடைக்கின்ற உற்சாகமும், புளகாங்கிதமும் அளவிட முடியாதது. தந்தையின் விரல்பிடித்து திருவிழாவில் பலூன் பொறுக்கும் குழந்தையின் பரவசம் இந்த காலத்தின் அற்புதம். இந்தக் காலம் இப்படியே நீடிக்காதா என மனம் ஏங்கும் ! ஆன்மீகத்தின் ஆரம்ப காலம் ! ஆனந்தத்தின் அற்புத காலம்.

2. இலையுதிர் காலம் !

இலையுதிர்க்காலம் புதுப்பிறப்பின் காலம். தலைகளில் இருக்கும் இலைகளை உதிர்த்து விட்டு மரங்கள் நிராயுதபாணியாய் நிற்கும் காலம். இன்னொரு வசந்த முளைக்காகக் கிளைகள் காத்திருக்கும் காலம். உதிர்தல் இல்லாமல் முளைத்தல் இல்லை. இழத்தல் இல்லாமல் பெறுதல் இல்லை. தியாகம் இல்லாமல் மேன்மை இல்லை !
ஆன்மீகப் பயணத்தின் இரண்டாம் பிறப்பு இலையுதிர்காலம். நம்மிடம் இருக்கின்ற பாவத்தின் களைகளை உதிர்க்கும் காலம். மறுபிறப்பின் முன்னுரை இந்தக் காலத்தில் தான் எழுதப்படுகிறது. பதின்வயதுகளில் ஒருவன் புதுப்பிறப்பெடுத்தால் அவனுக்குள் ஆன்மீகத்தின் அடைமழை நிச்சயம் பொழியும்.

உள்ளே இருக்கின்ற அழுக்குத் தண்ணீரை அகற்றாமல், பாத்திரத்தை மீண்டும் கழுவாமல், நல்ல நீரை நிரப்புதல் சாத்தியமில்லை. பழைய மனிதனின் மரணமே புதிய மனிதனின் ஜனனம். ஆன்மீகத்தின் வளர்நிலைக் காலம் என்பது இலையுதிர்க்காலமே ! இலைகளை உதிர்க்காமல் இருக்கின்ற மரங்கள் வசந்தத்தை வரவேற்பதில்லை !
3. வேனிற்காலம்.

வேனிற்காலம் வியர்வையின் காலம். இந்தக் காலத்தில் தான் வேலைகள் அதீத வேகத்தில் நடக்கும். உலகமே சுறுசுறுப்பாய் இயங்கும் ! பணியே இங்கே பிரதானமாகும்.
இந்த வேனிற்காலம் சோர்வுகளைக் கொண்டுவரும். அசதியைக் கொண்டு வரும். நிழல்வேண்டுமென ஏக்கம் கொள்ளும் பாதங்களைக் கொண்டு வரும். எனினும் இந்தக் காலமே நீளமான பகலின் காலம். ஒளியின்றி வழியைப் பற்றிப் போதித்தல் இயலாது ! இது கனிகொடுக்கும் காலம். ஒளிச்சேர்க்கையின் காலம்.

நமது ஆன்மீக வாழ்க்கையில் எந்த அளவுக்கு இந்த வேனிற்காலத்தைப் பயன்படுத்துகிறோம் என்பதைக் கொண்டே நமது ஆன்மீக வாழ்வின் ஆழம் அளவிடப்படும்.
4. பனிக்காலம் .

பனிக்காலம், தனிக்காலம் ! சோர்வின் காலம். வெளியே சென்றால் குளிர் வாட்டியெடுக்கும். சன்னலின் கம்பிகள் வழியே பனிக்காற்று கோலியாத்தின் வாளைப் போல மூர்க்கமாய் மிரட்டும்.

இது முதுமையின் காலம் எனலாம். போர்வைக்குள் கதகதப்பைத் தேடும் காலம். ஒரு தேனீர் குடித்து, காலத்தை நினைவுகளின் தேர்களில் ஏறிக் கடக்கும் பருவம் இது. மேலை நாடுகளில் வெண் பனியின் யுத்தம் நடக்கும் காலம் இது. சாலைகளை பனிக்கரடி கட்டிப்பிடித்துப் படுத்திருப்பது போல எங்கும் பனிக் குன்றுகளே கண்சிமிட்டும்.

ஆன்மீகப் பயணத்தின் கடைசிக் காலம். இறைவனின் அன்பின் அரவணைப்புக்குள் அமைதியாய் இருந்திடவே மனம் துடிக்கும். அந்த கதகதப்பு உணர்வுகளில் உயிரைக் காத்துக் கொள்ளும் காலம். வேனிற்காலத்தில் தேவையானவற்றைச் சேமிக்கும் எறும்புகள் பனிக்காலத்தில் பதட்டப்படாது. அது போல, ஆன்மீக வேனிற்காலத்தில் இறைவனின் பிரியத்துக்குரிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள் பரமன் தரும் பனிக்காலத்தில் பதற மாட்டார்கள். அவரது அன்புக்குள் அமைதியாய் இருப்பார்கள்.

பருவங்களை அறிவோம்
பரமனை அணிவோம்.




எங்கள் இனிய காதலர்தின வாழ்த்துக்கள்

# ஆங்கிலப் புத்தாண்டில் ஆலயங்களில் விஷேட பூசைகள்






யேர்மனி - டோட்மூண்ட் சாந்தநாயகி சமித சந்திர மௌலீஸ்வரர் [ சிவன் கோவில்] 01.01.2018 ஆலயத்தில் .....







யேர்மனி சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயம். 01.01.2018 படங்கள். ஆன்மீகத் தென்றல்.த.புவனேந்திரன்.

## நான் சூரியாவைப் பார்த்து வழிஞ்சிருக்கேன்: மேடையில் உண்மையை ஒப்புக் கொண்ட கீர்த்தி சுரேஷ்

### ஒரு நிமிஷம் தலைசுத்திருச்சு!



அவரை பார்த்து வழிந்திருக்கிறேன் என்று தானா சேர்ந்த கூட்டம் பிரஸ் மீட்டில் தெரிவித்துள்ளார் கீர்த்தி சுரேஷ். விக்னேஷ் சிவன் இயக்கத்தில் சூர்யா, கீர்த்தி சுரேஷ், ரம்யா கிருஷ்ணன் உள்ளிட்டோர் நடித்துள்ள தானா சேர்ந்த கூட்டம் படம் பொங்கல் ஸ்பெஷலாக ரிலீஸாக உள்ளது. இந்நிலையில் நடந்த தானா சேர்ந்த கூட்டம் பிரஸ் மீட்டில் பேசிய கீர்த்தி கூறியதாவது, தானா சேர்ந்த கூட்டம் படத்தில் நடிக்க வாய்ப்பு கொடுத்த ஞானவேல் ராஜா சாருக்கு நன்றி. அன்பான இயக்குனர் பற்றி கூற வேண்டும்.

ஹீரோயின் இயக்குனர் ஒரு அன்பான பிரதர். இந்த வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி பிரதர். இந்த படத்தில் ஹீரோயின் கதாபாத்திரம் அழகானது. தினேஷ் ப்ரோவுக்கு நன்றி. 80கள் காலத்தை ரொம்ப அழகாக காட்டியிருப்பார் அவர். சூர்யா சஞ்சய் ராமசாமியை பார்த்து நான் வழிஞ்சிருக்கிறேன். இன்று அவருடன் சேர்ந்து நடித்துள்ளேன்.

இது எனக்கு கிடைத்த பாக்கியம். சூர்யா சாருடன் சேர்ந்து நடித்தது எனக்கு பெரிய விஷயம் என்றார் கீர்த்தி ரசிகர்கள் நான் விஜய் ரசிகை என்று இத்தனை நாட்களாக கூறிவிட்டு தற்போது என்னவென்றால் பள்ளிக்காலத்தில் இருந்தே நான் சூர்யாவின் தீவிர ரசிகை என்கிறாரே என எனக் கேட்டதும் தளபதி ரசிகர்களுக்கு ஒருநிமிஷம் தலைசுத்திருச்சு! இது ரஜினி அவரது கட்சி கொள்கை என்ன என்று கேட்டதும் வந்த வாரத்தை. நாளை ஒரு தமிழ் படத்தின் தலைப்பாக இது வந்தாலும் வியப்பில்லை. நெருப்படா! மகிழ்ச்சி! ஒருதரம் சொன்னால். இப்படி படங்களின் பெயர் நீளலாம்.






Dr IN

# வயதாகும்போது மூளை மங்குதலைத் தடுத்தல்!

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

உடற்பயிற்சி உடல் நலத்துக்கு அவசியமானது என்பது இப்பொழுது பெரும் பாலானவர்களுக்குப் புரிந்திருக்கிறது. இருந்தபோதும் அவர்கள் எல்லோரும் அதனைச் செய்வதேயில்லை. அதற்குக் காரணங்களாக இவற்றைச் சொல்லாம்.

முக்கியமாகச் சோம்படட. பலருக்கும் தங்களது வழமையான வேலைகளைத் தவிர புதிய விடயங்களில் ஈடுபடுவதற்குத் தயக்கமும் சோம்பலும் இருக் கிறது.

புதிய விடயங்களுக்கு நேரம் எவ்வாறு ஒதுக்குவது என்பது தெரிவதில்லை. "எனது உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. எனக்கு ஏன் உடற்பயிற்சி என்பது பலரது விதண்டா விவாதமாகும். கண்கெட்டாற் பிறகு சூரிய நமஸ்காரம் ஏன் எனப் பேச்சுக்கு சொல்வார்கள். நோய் வராமல் தடுப்பதற்கே முக்கியமாக உடற்பயிற்சி தேவை. நோய் வந்து முட்டிய பின் அல்ல.

உடற்பயிற்சிகளில் மிகவும் எளிதானதும், எல்லோராலும் செய்யக் கூடியதும், சுலபமானதும் நடைப்பயிற்சிதான் என்பதைச் சொல்ல வேண்டியதிடடலை.

இந்த நடைப்பயிற்சியானது உடல்: நலத்துக்கு மிகவும் நல்லது என்பதை பல மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன. ஆனால் நடைப்பயிற்சிக்கும் அறிவாற்றல் குறையாது இருப்பதற்கும் தொடர்பு உள்ளது என புதிய மருத்துவ ஆய்வு சொல்கிறது.

65 வயதுக்கு மேற்பட்ட 300 பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்படுத்தப்பட்டனர். அவர்கள் தினமும் எவ்வளவு தூரம் நடக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டது. உடனடியாகவும், 9 வருடங்கள் கடந்த பின்னரும் அவர்களது மூளையை MRI ஸ்கான் செய்து பார்த்தனர். ஒவ்வொரு வாரத்தில் 6 முதல் 9 மைல் தூரம் நடந்தவர்களது மூளையிலுள்ள ஆரோக்கிய பகுதியின் (Gray matter) கனவளவு அதிகரித்திருக்கக் காணப்பட்டது.

எனவே இவர்களது அறிவு சார்ந்த செயற்பாடுகள் குறைவதற்கான சாத்தியங்கள் குறைவாகும். அதாவது மூளை மங்குவதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆயினும் நடக்காதவர்களின் மூளையின் ஆரோக்கியமான பகுதியில் அவ்வாறான நல்ல மாற்றம் அவதானிக்கப்படவில்லை.



ஏற்கனவே செய்யப்பட்ட சில ஆய்வுகளின் மூலம் நல்ல உடற்பயிற்சிகள் செய்வதனால் கலங்களில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் என்பது தெரிய வந்தது. இப்பொழுது நடைப் பயிற்சியும் அவ்வாறே நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும் என்பது தெரிகிறது.

வேறு எதற்காவது அல்லாவிடினும், எதிர்காலத்தில் அறளை பெயர்ந்து, பிள்ளைகளுக்கும் சொந்தபந்த ங்களுக்கும் சுமையாகவும் தொல்லை கொடுக்காதும் இருப்பதற்காகவாவது தினசரி நடைப்பயிற்சி செய்யுங்கள்.

அறளை பெயர்தலைத் தடுக்க நவீன தொழில்நுட்பங்களில் ஈடுபாடு காட்டுவதும் உதவும். முது வயதில் மூளை மங்காதிருப்பதற்கு இன்றைய வாழ்விலிருந்து விடுபடாமல் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப முன் னேற்றங்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவது உதவும் என்பது முன்னொரு ஆய்விடட தெரியவந்ததை நினைவுபடுத்தலாம்.

கம்பியூட்டர், இணையம், மொபைல் போன் போன்ற நவீன சாதனங்களை, இவை எனக்கு முடியாதது என ஒதுக்கிவிடாது பயன்படுத்துவது நன்மை பயக்கும்.

பழவகைகள், நார்ப்பொருள் உணவுகள், இலைவகை உணவுகளை தினசரி உணவில் தாராளமாகச் சேர்ப்பதும் அவசியமாகும்

Juni 24,25,26 Bis 4 Wochen ab 589,00€
Juli Anfang Bis Juli 22. ab 749,00€
Juli 22- 17 August ab 689,00€

Emirates

Emirates Sommer 2018
SRILANKA-COLOMBO
Welt Nummer 1 Airline / Nummer 1 Spezial

FON : 0231 557 4319/ 0231 5896 557 MOB: 017621682149
Century Travels GmbH- Nishanthan

# ஒரு பெண்ணுக்கு சமையல் கலை அத்தியா அவசியமா?



றஜினா தருமராஜா

அன்று முதல் இன்று வரை சமையல் என்றாலே ஞாபகத்துக்கு வருபவர் யார்? ஆண்களா அல்லது பெண்களா? யாரைக் கேட்டாலும் பெண்கள் என்று தான் கூறுகின்றார்கள்.
பெண்களுக்குச் சமையல் கலை தெரிந்து இருப்பது அத்தியா அவசியமாக இருந்தது அந்தக்காலம். ஆனால் இந்தக்காலம் கூறுவது என்ன? சமையல் தெரிந்திருந்தால் நன்று!

தற்போதைய காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வீட்டு வேலைகளிலும் சமையல் வேலைகளிலும் பங்கு உண்டு. ஆகையால் பெண்களுக்கு தெரிந்திருப்பது அத்தியா அவசியமில்லை என்று கூறுகின்றனர்.

பல குடும்பங்களில் ஆண்கள் வேலைக்குச் செல்வதனால் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்து வருகின்றனர். இப்பெண்களுக்கு சமையல் கலை அத்தியா அவசியமாக அமைகின்றது. வேலைக்குச் செல்லும் பெண்கள் என்ன செய்வது? அவர்களும் தெரிந்திருப்பது நன்று தானே. தெரியாவிடின் அவர் பசியை யார் போக்குவது? கடைகளில் வாங்கி உண்ணுவது உடலுக்கு நன்மை தராதல்லவா.

மற்றும் ஒரு தாய் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்கிறார். அவர் தான் உணவு செய்து கொடுக்கிறார். தாய் என்பவருக்கு சமையல் கலை அத்தியா அவசியம் தானே. தாயானவர் நல்ல சத்துள்ள ஆரோக்கியமான உணவுகளை சமைத்துக் கொடுக்கிறார். இவர்கள் கூடுதலாகச் சிக்கனமாகச் சமைப்பார்கள்.
பெண்கள் வீட்டில் சிறு வயதிலிருந்தே சமையல் கலையினைத் தாயுடன் சேர்ந்து கற்றுக் கொள்கிறார்கள். அதேவீட்டில் ஆண்மகன்கள் அவ்வேலைகள் செய்யத் தேவையில்லை என்று தாயார் கூறுவார். அப் பழக்கத்திலே பெண்கள் சமையல் கலையில் ஈடுபட்டு வருகின்றனர்.
ஆண்களை நான் குறைவாகக் குறிப்பிடவில்லை. ஆண்களிலும் மிகச் சிறப்பாகச் சமைப்பவர்கள் இருக்கிறார்கள்.

பெண்கள் சமையலுக்கு மட்டும் தகுதியானவர்கள் என்பது தவறல்லவா.
சமையல் கலை என்பது எல்லோருக்கும் வருவதில்லை. இக்கலையினைச் சிறப்பாகச் செய்பவர் வாழ்க்கைத் துணையாக அமைந்தால் மகிழ்ச்சி அல்லவா. தமிழரின் பண்பில் மிகச் சிறந்தது விருந்தோம்பல்.

சமையல் கலை அவசியமானால் தான் வீட்டுக்கு வருபவர்களை சரியாக வரவேற்றுக் கொள்ளலாம்.
நாங்கள் சமைத்ததை உண்டபின்அவர்கள் வாழ்த்திப் பாராட்டும் போது ஏற்படும் மகிழ்வுக்கு வார்த்தையல்லை.

ஆணோ பெண்ணோ, அனைவரும் சமையல் கலையினை அத்தியா அவசியம் என்று நினைத்துக்கொள்ளுங்கள். உணவை சுவைத்து உண்ண வேண்டுமல்லவா!







## யேர்மனி கஸ்ராப் றவுக்சல் தமிழாலயத்தின் தைப்பொங்கல் விழா

கஸ்ராப் றவுக்சல் தமிழாலயத்தின் தைப்பொங்கல் விழா தமிழாலய நிர்வாகத்தினர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்களுடன் ஏனைய தமிழ் மக்களும் இணைந்து 20.01.2018 அன்று காலை தமிழாலயத்தின் வெளிமுற்றத்தில் பொங்கலிடப்பட்டு பின்பு மாணவர்களின் கலை நிகழ்வுகள் யாவும் சிறப்புடன் நடைபெற்றன.தமிழ்க்கல்விக்கழகத்தின் வடமத்திய மாநிலச் செயற்பாட்டாளர் தாமோதரம்பிள்ளை நற்குணராஜா கஸ்றொப் றவுக்சல் நகர துணைநகரபிதா கஸ்றொப் றவுக்சல் நகர கலை கலாச்சாரப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் கஸ்றொப் றவுக்சல் நகரத்தின் AGORA கலாச்சார மையத்தின் செயற்பாட்டாளர் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்.






அன்று.யாழ்ப்பாணத்தில்...

# "ஒரே மேடையில் 99 அழகிகளுடன் பொப்பிசைச் சக்கரவர்த்தி A.E மனோகரன்"



யூட் பிரகாஷ்

1970களின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற ஒரு இசை நிகழ்ச்சியை விளம்பரப்படுத்த, யாழ் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்றை பற்றி அண்ணர் ஒருத்தர் கிளுகிளுப்புடன் நினைவு கூர்ந்தார். "அடேய் தம்பி, it had four mini skirt clad ladies with Mano in the middle" என்று அந்த அண்ணா, தன்னுடைய விடலைப் பருவ நாற்களிற்கே என்னை கூட்டிப் போனார்.

"வீட்டில எங்களை A.E மனோகரனின் நிகழ்ச்சிகளிற்கு போக விட மாட்டீனம்" என்று சொன்ன அண்ணரின் குரலில் கோபமும் கவலையும் கலந்திருந்தது. யாழ்ப்பாணத்தை மெல்ல மெல்ல வசியப்படுத்தத் தொடங்கியிருந்த பொப் இசையை, யாழ்ப்பாணத்தின் பழைமைவாதம் பேணும் சமுதாயம் (conservative society) வரவேற்க மறுத்தத காலகட்டம் அது.

"வீரசிங்கம் மண்டபத்திலும் யாழ் ழுிநெ யுசை வுாநயவசநலும் (அதான் எங்கட முற்றவெளி) மனோகரனின். program நடக்கும். Stage க்கு முன்னுக்கு வந்து பெடியள் ஆடிப்பாடி அட்டகாசம் செய்வது, அப்பத்தய யாழ்ப்பாணத்தாருக்கு புதுசா இருந்தது" என்று அண்ணர் சொல்லிக் கொண்டே போனார்.

"உது உருப்பிடாதவங்கள் போற இடம், நீ அங்க போகக் கூடாது, அவயும் அவட சடை மயிரும் Bell bottom களுசாணும், விசர் கூட்டம்" என்று பொப் இசையில் மயங்கிய் இளைஞர்களை ஹிப்பிகளாகவே பழமைவாத சமுதாயம் கண்ணோக்கியது என்று அண்ணர் சமூகவியல் வகுப்பெடுத்தார்.

எழுபதுகளில் எழுச்சிக் கொண்ட இந்த பொப் இசை அலையிற்கு வித்திட்டவர்கள், பரி யோவான் கல்லூரியின் பழைய மாணவனான AE மனோகரன், யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவனான நித்தி கனகரத்தினம் மற்றும் "ஓ ஷீலா ஓ சாந்தி" புகழ் அமுதன் அண்ணாமலை.

பழங்கதைகள் கதைக்கிறது என்றால் ஜொனியன்ஸிற்கு வலு விருப்பம். "மனோகரன் வந்துடா Fleming Hostel லில் தான் இருந்தவன், நான் அப்ப Everts ல் இருந்தனான்" என்று மெல்பேர்ணில் இருக்கும் ஒருத்தர் சொல்ல, கொழும்பில் இருக்கும் இன்னொருத்தரோ "இந்த வடை வடையா வித்து வந்தா சிங்காரக் கிழவி பாட்டு இருக்கைல்லோடா" என்று தொடங்கி "அந்தப் பாட்டு,பெரிய கிணத்துக்கு பக்கத்தில் இருக்கும் ராஜசிங்கம் ஹொஸ்டலில் வைத்து தான் மனோ இயற்றி பாடினவன்" என்று, பொப்பிசைச் சக்கரவர்த்தியின் பரி யோவான் கல்லூரிக் கால வரலாற்றைப் பதிவு செய்தார். "Hostel Dayயில் தான்டா அவன் கலக்க தொடங்கினவன்" என்று பரி யோவானின் விடுதி மாணவர்களிற்கு இடையில் நடக்கும் கலை கலாச்சார போட்டிகளை இன்னுமொரு ஜொனியன் நினைவுகூர்ந்தார். "தானே நாடகம் எல்லாம் எழுதி நடிப்பான், அப்பவே ஒன்றிரண்டு பாட்டுக்கள் தானே எழுதி, மியூசிக் போட்டு பாடுவான்டா" என்று அவர் விளாசிக் கொண்டு போன போது, பரி யோவானின் Hostel Day பற்றி Jaffna Boy புத்தகத்தில் பேர்னாட் சின்னையா விவரித்தது ஞாபகம் வந்தது.

2013ம் ஆண்டு மீண்டும் பரி யோவான் அன்னை மடிக்குத் திரும்பிய AE மனோகரன், யாழ்ப்பாணத்தின் பிரபல இசைக் குழுக்களான அருணா மற்றும் ராஜன்ஸோடு இணைந்து Peto Hall ல் ஒரு இசை நிகழ்ச்சியை வழங்கினார். உடல் உபாதைகளை பொருட்படுத்தாமல், அந்த அறுபது சொச்ச வயதிலும், சென் ஜோன்ஸ் காற்று பட்ட உற்சாகத்தில், தன்னந்தனியாக 36 பாடல்கள் பாடி, அந்த நிகழ்வை என்றும் மறக்கமுடியாத தனது கடைசி யாழ்ப்பாண நிகழ்ச்சியாக படைத்தார்.

2010ம் ஆண்டு மெல்பேர்ணில் அரங்கேறிய நிகழ்ச்சியை எமது கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அரங்கம் நிறைந்த மக்களுடன் அட்டகாசமாய் அரங்கேறிய அந்த நிகழ்ச்சியில் stage management பொறுப்பை ஏற்றிருந்தேன்.

"குளிருது....குளிருது....குளிருதடா...,ராசா"

என்று பாடிக் கொண்டே மேடையின் பின்புற அறைக்குள் நுழைந்த AE மனோகரனோடு கழித்த அந்த சில மணித்தியாலங்கள் வாழ்வில் மறக்க முடியாதவை.

மெல்பேர்ண் நிகழ்வின் இறுதியில், அன்று முற்றவெளியிலும் வீரசிங்கம் மண்டபத்திலும் மேடைக்கு முன்னால் ஆடிய "அன்றைய இளைஞர்கள்" சிலர், தங்கள் வயதையும் பதவிகளையும் பட்டங்களையும் சமூக அந்தஸ்தையும் எல்லாம் மறந்து, மெல்பேர்ணில் மேடையிலேயே ஏறி, மனோகரனை சூழ நின்று ஆடி, AE மனோகரனை மட்டுமல்ல அவர்தம் குடும்பத்தாரையும் மெல்பேர்ண் தமிழ் சமூகத்தையும் ஆச்சரியப்பட வைத்தார்கள். சற்றும் எதிர்பாராத இந்த "அந்தக்கால இளைஞர்களின்" ஆட்டத்தில், AE மனோகரனிற்கு சந்தோஷத்தில் கண்கலங்கி விட்டது.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் வீட்L Partyகளையும், ஒன்று கூடல்களையும் அலங்கரிக்கும் பாடல்கள் AE மனோகரனின் பாடல்கள் தான். எல்லோரும் சேர்ந்து கை தட்டி பாட்டு பாடி ஆட்டம் போடும் அருமையான பாடல்களின் கர்த்தா, பொப் இசைச் சக்கரவர்த்தி AE மனோகரன் தான்.

"நமோ நமோ" பாட மறுக்கும் தமிழர்களின் உத்தியோகபூர்வமற்ற தேசிய கீதம், AE மனோகரனின் "இலங்கை என்பது நம் தாய் திருநாடு" தானாகத் தானிருக்கும். "நல்லூர் நாயகனே நல்விழி காட்டுமையா" என்று உருகும் மனோகரனின் குரல் இன்றும் "நல்லூர் எம் பதியில்" ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது. சில ஆண்டுகளிற்கு முன்னர் AE மனோகரன் பாடிய "யாழ்ப்பாணம் போக ரெடியா" பாட்டு புலம்பெயர் வாழ் மக்களை தாயகத்திற்கு மீண்டும் அழைத்துச் சென்றதில் தாக்கம் செலுத்தியது.

"அண்ணே, அப்ப பற்றிக்ஸில் நடந்த அந்த நிகழ்ச்சிக்கு mini skirt போட்ட 99 அழகிகள் வந்தவயளோ" AE மனோகரன் பற்றிய நினைவைகளைப் பகிரத் தொடங்கிய அண்ணையை கிண்டினேன்.

"ராப் பத்து மணியாச்சு, மனோகரனை காணேல்ல, உவங்கள் சனத்தை வரவைக்க தான் மனோகரனை போஸ்டரில் அடிச்சவங்கள் என்று சனம் கத்தி, கூ அடிக்க தொடங்கிட்டுது, சிஸ்டர் மாரும் கொன்வென்ட் பெட்டையளும் அன்டிமாரும் பின்னல் போட்ட Ranjith Chair எல் இருக்கீனம்" அண்ண மாட்டை மரத்தில் கட்டினார்.

"பேந்து என்ன நடந்தது.. அண்ணே...அந்த 99 பெட்டையள்..." அண்ணரை கெதிப்படுத்தினேன். "பொறடா பொறடா...அதுக்கு வாறன், கொஞ்சம் பொறு" என்ற அண்ணர், பற்றிக்ஸ் மைதானத்தின் உயர்ந்த மதில்களை சுற்றி வந்து, பத்தரைக்கு AE மனோகரன் மேடையேறிய காட்சியை வர்ணித்து, தான் புது களுசான் போட்டுக் கொண்டு போனதைப் புளுகி, கடைசியாக விஷயத்திற்கு வந்தார், "ஆக ஒரே ஒரு சிங்கள பெட்டை தான்டா வந்தவள்.. அதுவும் MGR ன் லதாவை பார்த்த Jaffna கண்களிற்கு it was a huge disappointment, எனக்கும் தான்".

பொப்பிசைச் சக்கரவர்த்தி AE மனோகரன் 2010ல் சிட்னியில் கானா பிரபாவிற்கு அளித்த பேட்டியில், தான் 250ற்கு மேற்பட்ட படங்கள் நடித்திருந்தாலும் எத்தனையோ தொலைக்காட்சி நாடகங்கள் நடித்திருந்தாலும், தனக்கு மனமகிழ்ச்சியை தரும் விஷயத்தை பற்றி அவருடைய பாணியிலேயே பம்பலாக பதிவு செய்வார்.

"ஆனா என்ன தான் இருந்தாலும், எங்கட சாதி சனங்கள் வந்து நின்று, பாட்டை கேட்டு, கையை தட்டி, ஒரு ஆட்டம் ஒன்று ஆடி, ஒரு குலுக்கு ஒன்று குலுக்கி விட்டு போற மாதிரி, ஒரு மகிழ்ச்சியான குஷியான ஒரு இது வேறெதிலும் இல்லை, எங்கட சனம் வந்து ஒரு கிலுக்கல் கிலுக்கினா அதில உலகமே மடக்கம்.. அவ்வளவு தான்"

AE மனோகரன் பாடிய சுராங்கனியும், கோப்பித் தோட்ட முதலாளியும், டிங்கிரி டிங்காலேயும், ஆய் ஊய் மீனாட்சியின் எலிகள் பட்டாளமும், மற்ற பாட்டுக்களும் ஒலித்துக் கொண்டே இருக்கும் மட்டும் எங்கட சனத்தின் கிலுக்கல் கிலுக்கிக் கொண்டு தானிருக்கும்.



**இசை அல்பம் வெளியீடு!**








தேனாண்டாள் பிலிம்ஸ் ஹேமா ருக்மணி
( மெரிசல் படத்தயாரிப்பாளர்)
பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.



# சென்னையைக் கலக்கிய சஞ்ஜே சிவாவின் – என் பாதை !

லண்டனில் உள்ள நமது தாயகக்கலைஞனின் டிபிபி நிறுவனம் தனது 12வது படைப்பான"என்பாதை" ஆல்பத்தின் இசை வெளியீட்டு விழாவை சென்னையில் அமெரிக்காவில் உள்ள டி.எம்.இ குழுவுடன் இணைந்து நடத்தியது. கடந்த டிசம்பர் மாதம் 2ம் தியதி நடந்த இந்த விழா பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது !

விழாவின் நாயகனான இசையமைப்பாளர் திரு.சஞ்சே சிவா அவர்கள் சென்னையின் அடையாளமான அலங்கரிக்கப்பட்ட ஆட்டோவில் இலண்டன் கெட்டப்பில் வந்திறங்க விழா நாள் அமர்க்களப்பட்டது. வடபழனி பிவிஆர் அரங்கம் பார்வையாளர்களால் நிரம்பியிருக்க விழா மாலை சுமார் 5.30 மணியளவில் விழா ஆரம்பமானது.

தேனாண்டாள் பிலிம்ஸ் ஹேமா ருக்மணி ( மெரிசல் படத்தயாரிப்பாளர்) அவர்கள் விழாவுக்கு கௌரவ விருந்தினராக வந்திருந்தார்கள். தனது முதல் படைப்பின் மூலம் தமிழ்த் திரை உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த கிடாரி பட இயக்குனர் திரு பிரசாத் முருகேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்கள். அவரோடு சென்னை ஜான்லீ ஸ்கூல் ஆ.ஃப் மியூசிக்ஸ், மெட்ராஸ் மியூசிக் காலேஜ் ஆகியவற்றின் நிறுவனர் டாக்டர் ஜான்பால் அவர்களும், பின்னணிப் பாடகர் ஆலாப் ராஜு அவர்களும், திரைப்பட நடிகர் திரு அபிஷேக் அவர்களும், திரைப்படப் பாடகி கவிதா தாமஸ் அவர்களும் மற்றும் பல பிரபலங்களும் கலந்து கொண்டனர்.

அதிரடிப் பாடல் நடனம் ஒன்றுடன் விழா ஆரம்பமானது. நடனத்தை பிளாக் ஸ்வான் ஃபேஸ் குழுவினர் நடத்தினார்கள். நிகழ்ச்சித் தொகுப்பாளர் .ரேடியோ 1 பண்பலை ஸ்ருதி அவர்கள் விழாவை கலகலப்பாக நடத்தினார். "என்பாதை" எனும் பெயரும், அதன் குறுந்தகடு வடிவமைப்புப் படமும் எதைப் பிரதிபலிக்கிறது எனக் கேட்டு விழாவை ஆரம்பத்திலேயே உற்சாகப் படுத்தினார்கள்.




நம்மண்ணின் மைந்தன் இலண்டனில் வசிக்கும் இசையமைப்பாளர் திரு. சஞ்சே சிவா அவர்கள் பேசும்போது

"தனது படைப்புகள் பேசவேண்டும். எனது மொழி இசை மொழி. நான் மேடையில் பேசுபவன் அல்ல, இசைக்கருவிகளின் வழியாக மக்களோடு பேசுபவன். எனவே எனது இசையைப் பேசவிட்டு, நீங்கள் கேளுங்கள். அதுகுறித்த கேள்விகள் ஏதேனும் இருந்தால் நான் பதிலளிக்கிறேன்" என ரத்தினச் சுருக்கமாகப் பேசினார்.

என்பாதை ஆல்பத்தின் பாடலாசிரியர் சேவியர் அவர்கள் பேசும்போது சஞ்சே அவர்களுடனான நட்பைக் குறித்தும், சஞ்சே அவர்களுக்கு இசைமீதும் தமிழ் மீதும் இரீக்கும் தணியாத தாகத்தைக் குறித்தும் பேசினார். சஞ்சே அவர்களின் தந்தை டாக்டர். எம்.கே.எஸ்.சிவகுமரன் அவர்கள் இலண்டன் ஜெர்மனி போன்ற நாடுகளில் ஒரு தமிழ்ப்பத்திரிகையை, இலவசமாக, கடந்த அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக நடத்தி வருகிறார் எனும் செய்தி பார்வையாளர்களை வியப்பிலாழ்த்தியது. அரங்கம் கைத்தட்டலில் அதிர்ந்தது. திரு சஞ்சே அவர்கள் தனது மண்மீதும், மனிதர்கள் மீதும் கொண்ட கரிசனையை, விசாரிப்பை இசை மூலம் நடத்துகிறார். அவர் இசைக்காக ஆரம்ப காலத்தில் பல சவால்களைச் சந்தித்தவர் என பேசி முடித்தார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்



# மருத்துவம், பொறியியல் துறைகளை ஆளும் தமிழர்கள்!

**- யாழ்ப்பாணத்திலிருந்து ராஜயோகன்.**

"இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் உயர் பதவிகளை யாழ்ப்பாணத் தமிழர்களே வகிக்கின்றனர்" என்று புகழாரம் சூட்டியிருக்கின்றார் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே. கொழும்பிலும், "வெளிநாடுகளிலும் உயர் பதவிகளை வகிப்பவர்கள் தமிழர்களே. பொறியல் துறையிலும், மருத்துவத் துறையிலும் தமிழர்களே சிறந்து விளங்குகின்றார்கள். மருத்துவம் பொறியியர் துறைகளை அவர்களே ஆள்கிறார்கள்" எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஆளுநர் இவ்வாறு புகழாரம் சூட்டியிருக்கும் தருணம் முக்கியானது. போருக்குப் பின்னர் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் வடபகுதி மாணவர்கள் இப்போதுதான் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள். யாழ்ப்பாணம் கல்வித் துறையில் எப்போதும் முன்னணியில்,இருந்திருக்கின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் கூட இந்த நிலையை யாழ் மாணவர்கள் தக்க வைத்துக் கொண்டிருந்தர்கள்.

ஆனால், அண்மைக் காலத்தில் வடபகுதி மக்களின் கல்வித் தரம் கீழே சென்றுகொண்டிருக்கின்றதா என்ற ஆதங்கம் கல்வியாளர்களைக் குடைந்துகொண்டிருந்தது. இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்து - நம்பிக்கையூட்டும் வகையில் யாழ்ப்பாண மாணவர்களின் பெறுபேறுகள் இம்முறை அமைந்திருக்கின்றன.

டிசெம்பர் இறுதியில் வெளிவந்த இந்தப் பெறுபெறுகள் கல்வித் துறையில் யாழ்ப்பாணம் மீண்டும் வெற்றிநடை போடத் தொடங்கியிருக்கின்றது என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கும் பின்னணியில்தான் ஆளுநர் இவ்வாறு சொல்லியிருக்கின்றார். யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றில் ,இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதுதான் அவர் யாழ். மாணவர்களின் கல்வித்துறை முன்னேற்றத்தை புகழ்ந்துரைத்திருக்கின்றார்.

## "நாம் கல்வியில் எமது பழைய நிலைக்குச் செல்ல ஆயத்தமாகி வருகின்றோம் என்பது புலனாகின்றது"

**முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்**

இது தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் தனது கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது:

"2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துவிட்ட நிலையில் வடபகுதி மாணவர்களில் குறிப்பிட்ட பகுதியினர் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்நிலை வகிப்பது வாழ்த்துக்குரியது. அதே போன்று கணிதத் துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற தமிழ் மாணவனின் அயரா உழைப்பும் புத்திக் கூர்மையும் பாராட்டுக்குரியது. நாம் எமது பழைய நிலைக்குச் செல்ல ஆயத்தமாகி வருகின்றோம் என்பது புலனாகின்றது" என முதலமைச்சர் கூறியிருக்கின்றார்.



சிறிதரன் துவாரகன்



யெராஜன் போல்



கமலேஸ்வரி செந்தில்நாதன்

ஆம், உண்மையில் 2017 க்கான கபொத உயர் தரப் பெறுபேறுகள் நீண்ட காலத்துக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை - உற்சாகத்தைத் தரும் வகையில் வெளிவந்திருக்கின்றது. பௌதீக விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் யாழ். ஹாட்லி கல்லூரி மாணவரான சிறிதரன் துவாரகன் முதலிடம் பெற்றுள்ளார். புலோலி, புற்றளை, உபயகதிர் காமத்தைச் சேர்ந்த குறித்த மாணவன் யாழ். வடமராட்சி வலய கணினிவள முகாமையாளர் சிறிதரனின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய சாதனை குறித்து ஊடகவியலாளர்களிடம் பேசிய துவாரகன் சொன்ன கருத்துக்களும் முக்கியமானவை: "எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பேன். நான் ஒரேயோரு மேலதிக வகுப்புக்கு மாத்திரமே சென்றேன். இதனால் எனக்குப் படிப்பதற்கு நீண்ட நேரம் கிடைத்தது. மேலும் எனது தந்தை ஒரு தகவல் தொழில் நுட்பவியல் ஆசிரியராகவிருப்பதால் எனக்குக் கணினியைப் பயன்படுத்துவது மிக இலகுவாக இருந்ததோடு எனக்குப் புரிந்து கொள்ள முடியாத பாடங்களை ,இணையத்தில் தேடிப் பெற்றுப் படித்தேன்.

அதனால், பல பாடங்களை என்னால், இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அதுமட்டுமின்றி, எனது பாடசாலையில் உள்ள நூலகத்தில் பாடம் சம்பபந்தப்பட்ட பல விடங்களைத் தேடிப் படித்தேன். இன்னும் கடந்த கால வினாத்தாள்கள் அனைத்தையும் செய்து பார்த்துள்ளேன். இதனால் எனக்கு ஞாபக சக்தி மிக்வும் அதிகமாவிருக்கும்" எனக் கூறும் துவாரகன், தான் இந்தப்பெறு பேறைப் பெற உதவியாக இருந்த பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.

துவாரகனை விட மேலும் இரு யாழ். மாவட்ட மாணவர்கள் இம்முறை அகிய இலங்கை ரீதியில் சாதனை புரிந்திருக்கின்றார்கள். யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி கமலேஸ்வரி செந்தில்நாதன் உயிரியல் முறைமை தொழில் நுட்பப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த குறித்த மாணவி, உயிரியல் முறைமை தொழிநுட்பப் பிரிவில் 3ஏ சித்தி களைப் பெற்று (இசற் புள்ளி- 3.1990) பெற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் நிலையையும் பெற்றுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

பௌதிக விஞ்ஞானப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் யெராஜன் போல் ஜான்சென் 3 - ஏ சித்தியைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிறிதரன் துவாரகன் முதலிடத்தைப் பெற்றதை முன்னரே குறிப்பிட்டோம். ஹம்பகா பண்டார நாயக்க கல்லூரி மாணவன் பி.எச். சோமரட்ண இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

இதேவேளையில், யாழ். இந்துக் கல்லூரியின் 21 மாணவர்கள் 3 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர். குடா நாட்டில் உள்ள ஏனைய கல்லூரிகளின் பெறுபேறுகளும் இம்முறை சிறப்பானதாகவே இருக்கின்றது.

தொடர்ச்சி 13 ம் பக்கம்











கலாசூரி திவ்யா சுஜேன்

## ஞானம்

ஞானம் என்பது அறிவை விட உயர்ந்தது . புலன்களால் அறிவது, கற்றதால் பெறுவது , கற்பனையால் வருவது அறிவு. அனால் ஞானம் பிறவி பயனால் வரும் படைப்பின் அமைப்பு. பற்று என்பதை நாம் விலக்க முடியாது , எம் ஆன்மா நிறையும் போது , ஞான நிலையில் இறையுடன் கரையும் போது அதுவாகவே நம்மை விட்டு அகலும். ஞான காட்சிகளை கண்டு , நான் , நீ நிலை அறுத்து , உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் ஒன்றாக , கவியால் உய்ய நிலை எய்தி மெய்ஞ்ஞான அறிவை சுயமாக பெற்ற அவதார புருஷன் பாரதி.



காவி துணிவேண்டா
கற்றை சடைவேண்டா
பாவித்தல் போதும்
பரம நிலை எய்துதற்கே

அகத்துள் நின்றாடும் சிவனை பூரணமாக உணர்வதற்கு புறத்தை கவனிக்கும் காவி உடையும் , ஜடை முடியும் எதற்கு ? வெளியே சாமி வேஷம் போடுவதும் , பிறர் பார்க்க பக்தர் போல வேஷமிடுவதும் பக்தி நிலை ஆகி விடாது. ஐயனுடன் ஐக்கியமாகுதல் அக செயல்பாடு ஆதலால் அவனை எண்ணி ஐம்புலனும் அவன் வழி செல்ல தியானித்து இருந்தாலே போதும் என்கிறார்.

சாத்திரங்கள் வேண்டா
சதுமறைகள் ஏதுமில்லை
தோத்திரங்கள் இல்லை உள்ளம்
தொட்டு நின்றால் போதுமடா

ஸ்தோத்திரங்கள், சாஸ்திரங்கள் நான்கு மறைகள் கற்று அறிந்தால் சிவ நிலையை உணர்ந்ததாய் எண்ண முடியுமா ? இதெல்லாம்

பாரதிக்கு தேவையான கருவியாகும் கருத வில்லை. இறைவனை நினைக்கும் போதெல்லாம் உண்மை குடிகொள்ளும் உள்ளமதை தொட்டு நின்றாலே போதும். அக்கணம் உள்ளம் நனைக்கும் வெள்ளம் தான் சிவனது தனி பெரும் கருணை.

தவம் ஒன்றும் இல்லை ஒரு
சாதனையும் இல்லையடா
சிவம் ஒன்றே உள்ளதென
சிந்தை செய்தால் போதுமடா

நாம் தவம் செய்தும் பிரார்த்தனை செய்தும் பயிற்சி முறை செய்தும் தான் சிவநிலை கிட்டும் என்று எண்ணலாமோ? தாமாகவே முன்வந்தது தடுத்து ஆட்கொள்ளும் இறை தரும் பேரின்ப நிலையை அடைதல் அவனருளால் மட்டும் தானே நிகழும். ஆகவே நமது தவத்தாலும் திறனாலும் தான் சிவம் எம்மை கிட்டியது என்று எண்ணுதல் மடமை. அவ்வாறு நினைத்தால் அது . உயர் நிலையும் அல்ல என்று தன்னிலை உணர்ந்து தெய்வ நிலை அடைந்த சித்தன் பாரதி கூறுகிறார்.

சந்ததும் எங்கும் எல்லாம்
தானாகி நின்றசிவம்
வந்தெனுளே பாயுதென்று
வாய் சொன்னால் போதுமடா

தினம் தினம் கணமெல்லாம் யாவும் எதிலும் எல்லாமுமாய் வினை பயனாய் , விதியாய் , கார்ய காரணமாய் , ஒவ்வொரு அசைவிலும் வாக்கிலும் செயலிலும் எண்ணத்திலும் தாமாகி நிற்கும் சிவம் என்னுள் வந்து பாயுது , அவன் அருள் வெள்ளம் என்னுள் நிரம்புது என்று மட்டும் வாய் சொல் சொன்னால் போதும்.

மொழி தோற்கும் பேரானந்த பெரு வெள்ள பக்தியை எவ்வாறு மொழி பெயர்க்க முடியும் ? முயற்சித்தால் அதன் அழகும் ஆழமும் உண்மையும் கூட கெட்டு போய்விடும் .

நித்தம் சிவ வெள்ளம் என்னுள்
வீழ்ந்து நிரம்புது என்று உன்
சித்தமிசை கொள்ளும்
சிரத்தை ஒன்றே போதுமடா

நாத சக்தியால் ஆத்மாவின் செயலால் தோற்றமும் முடிவும் இல்லாத அரும் பெரும் ஜோதியிடத்து ஐக்கியமாகிய தோற்றமும் முடிவுமில்லா தமிழ் தந்த கவி சித்தனுக்கு என்றென்றும் சரணடைந்தே கிடப்போம்.


13ம் பக்க தொடர்ச்சி....

### மருத்துவம், பொறியியல் துறைகளை ஆளும் தமிழர்கள்!

குடாநாட்டில் கல்வித்துறை மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்கி யிருப்பது நம்பிக்கையளிப்பதாக அமைந்திருந் தாலும், தொடர்ந்தும் இந்த நிலையைத் தக்கவைக்க கல்வியாளர்கள் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதேவேளையில், குறைந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களும் அதனால் சோர்ந்துவிடாமல் தமக்குப் பொருத்தமான ஒரு துறையைத் தெரிவு செய்து அதில் சாதனை புரிய முன்வரவேண்டும். தமிழ் மக்களின் சின்னமாக இருப்பது கடும் உழைப்பும், கல்வியும்தான்.

அதுதான் அவர்களுடைய சொத்து! அவர் களுடைய எதிர் காலமும் அதில்தான் தங்கியிருக்கின்றது.







# பொற்காசுகள் கொடுத்த கீர்த்தி சுரேஷ்!-

நடிகையர் திலகம் சாவித்ரியின் வாழ்க்கை வரலாறு கதையில் உருவாகி வரும் படம் "மகாநதி". தமிழ் மற்றும் தெலுங்கில் தயாராகும் இந்தப் படம் தமிழில் "நடிகையர் திலகம்" என்ற பெயரில் வெளியாகிறது. சாவித்ரி வேடத்தில் கீர்த்தி சுரேஷ் நடிக்க, சமந்தா பத்திரிக்கை நிருபர் வேடத்தில் நடித்துள்ளார்.

துல்கர் சல்மான் ஜெமினி கணேசனாக நடிக்க, பிரகாஷ்ராஜ் ஒரு கதாசிரியராக நடிக்கிறார். நாக் அஸ்வின் இந்தப் படத்தை இயக்குகிறார். இப்படத்தில் சாவித்ரியாக நடிக்கும் கீர்த்தி சுரேஷ், தன்னுடன் நடித்தவர்களுக்கு தங்க காசுகளை பரிசாக கொடுத்திருக்கிறாராம்.

நடிகை கீர்த்தி சுரேஷ் வந்த வேகத்திலேயே ரசிகர்களின் அன்பை வெகுவாகச் சம்பாதித்து விட்டார். அவருக்கென ஒரு தனி ரசிகர்கள் கூட்டம் இருக்கிறது. ஆனால் அவரின் சில புகைப்படங்களையும், ரியாக்ஷன்களையும் சிலர் கலாய்த்து வருகிறார்கள். "மகாநதி" படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பில் நடித்த கீர்த்தி சுரேஷ், அதன்பிறகு வேறு சில படங்களில் நடித்து வந்தார். தற்போது மீண்டும் ஐதராபாத்தில் நடைபெறும் மகாநதி படப்பிடிப்பில் கலந்து கொண்டுள்ளார்.

சாவித்ரி பற்றி இந்த படத்தில் நடிப்பதற்கு முன்பு சாவித்ரி பற்றிய பல அரிய தகவல்களை அவருடன் பணியாற்றிய சீனியர் கலைஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாராம் கீர்த்தி சுரேஷ். நடிகை சாவித்ரி எப்போதும் தன் படங்களில் உடன் நடிப்பவர்களுக்கு தங்கக் காசுகளை அன்பளிப்பாக கொடுத்த விஷயத்தையும் தெரிந்து கொண்டாராம்.

ஒரு பழைய படத்தின் படப்பிடிப்பின்போது அந்த செட்டில் பணியாற்றிய அனைவருக்கும் சாவித்ரி தங்க நாணயம் பரிசளித்ததை அறிந்த கீர்த்தி சுரேஷ், சமீபத்தில் மகாநதி படப்பிடிப்பு குழுவினருக்கு தங்க நாணயங்களை பரிசளித்துள்ளார்.
மனதார வாழ்த்திய படக்குழு மனதார வாழ்த்திய படக்குழு படத்தில் சாவித்திரியாக கீர்த்தி சுரேஷ் நடித்தாலும், தற்போது சாவித்ரியின் குணத்தை உண்மையாகவே நிஜ வாழ்க்கையிலும் செய்துகாட்டியிருப்பதால் பரிசு பெற்றவர்கள் மகிழ்ச்சியுடன் கீர்த்தி சுரேஷைமனதார வாழ்த்தியுள்ளனர். இதைக் கேள்விப்பட்ட ரசிகர்கள் அசந்துபோயுள்ளனர்.

நடிகையர்திலகம் சாவித்திரி மிகவும் அடக்க ஒடுக்கமான காட்சிகளில் மட்டுமே நடித்தவர். அந்தக்காலத்தில் கட்டிப்பிடித்து தொட்டு நடிப்பதுகூட அரிது. அப்படி கட்டிப்பிடிப்பது என்றாலும் தன்கைகளை நாயகனின் நெஞ்சில் வைத்து, தன்கைமேலே தான் சாய்ந்து நடிப்பார்கள். இந்த வரிசையில் சௌவுக்கார்ஜானியும் அடக்கம். தங்கக்காசு மட்டுமல்ல அந்தகாலத்து சாவித்திரியின் சொத்து. நடிகைகளது சொந்த வாழ்வு பற்றி விமர்சிப்பது தேவை இல்லை.







# காதல் என்பது ஒரு முறை மட்டுமா ?

கூட்டுப்புழு வண்ணத்துப் பூச்சியாவது போல, ஒரு விதை முளைத்து மரமாகி மீண்டும் ஒரு விதைக்குள் ஒளிந்து கொள்வது போல மாற்றங்களின் தேரில் தான் மனுக்குலமும் பயணிக்கிறது !

நேற்று நம்மைத் தீண்டிய காற்றல்ல இன்று நம்மைத் தீண்டுவது ! நேற்று நமது வீட்டு சன்னல் வழியே வழுக்கி விழுந்த ஒளியல்ல இன்று அங்கே கிடப்பது. நேற்று நமது கால்நனைத்துச் சிரித்த நீரல்ல இன்று நதியில் ஓடுவது ! மாற்றங்களை இறுக்கிக் கட்டி முடிந்த மாலையே கிழமைகளாக நம் முன்னால் விரிந்து கிடக்கின்றன ! இதில் காதல் மட்டும் மீண்டுவராது என்பதும், மீண்டும் வராது என்பது யதார்த்தமல்ல !

கடற்கரையில் விரல்கிழித்த ஓவியமாய் காதல் புன்னகைக்கிறது. காலத்தின் கடலலைகளோ, கவலையின் காற்றலைகளோ வந்து அவற்றை மூடிச் செல்கின்றன. விரல்கள் மீண்டும் கோலத்தை வரைகின்றன.

அந்த கோலத்தையும் இதயம் ரசித்து மகிழ்கிறது ! அது கலையலாம் எனும் கவலையை மீறி நிலைத்திருக்கும் வரை புன்னகைக்க மனம் தயாராகிறது.




கடற்கரை மணலில் வீடு கட்டி விளையாடும் குழந்தை, தான் கட்டிய வீடு இடிந்தவுடன் தனது விளையாட்டை முடித்துக் கொள்வதில்லை !

விட்ட இடத்திலிருந்து புதிதாக இன்னொரு வீட்டைக் கட்டியெழுப்பத் துவங்குகிறது !

முதல் வீடு தந்த மகிழ்ச்சியை இரண்டாவது வீடும் தருகிறது. அதன் புன்னகையின் நீளம் குறைவதில்லை !

காதலும் அப்படியே ! இதயத்தின் இயங்குதசைகளில் இருக்கை போட்டு அமர்கிறது காதல். அது காலத்தின் குதிரைக்குளம்படிகளால் காயம்பட்டு வெளியேறும்போது வடுக்கள் வந்தமர்கின்றன.

ஆனால் அதுவே முடிவுரையல்ல. இன்னொரு காதல் அந்தப் படிக்கட்டுகளில் ஏறிவரும்போது இதயம் மீண்டும் இசைப்பயணத்தைத் துவங்கும். வடுக்கள் மூடிய நினைவுகளில் பூக்கள் வந்தமரும். வலிகள் நிரம்பிய நெஞ்சத்தில் நதிகள் முளைக்கத் துவங்கும்.

சிங்கம் 1, சிங்கம் 2, சிங்கம் 3 என படங்கள் வரிசை கட்டி வருவது போல, காதலிலும் காதல் 1, காதல் 2, காதல் 3 உண்டா என்பது ஒரு சர்வதேசக் கேள்வியாக இருக்கிறது.

சிலர் காதல் என்பது புதுக்கி வைத்த புனிதம், கழுவி வைத்த கடவுள், சலவை செய்த பால், அது ஒரு முறை தான் வரும் என அடித்துச் சொல்கிறார்கள். இரண்டாவது வருவதற்குப் பெயர் காதலே அல்ல ! அப்படி இரண்டாவதாய் வருவது காதலெனின் முதலில் வந்தது காதலல்ல என தத்துவமும் சொல்கின்றனர்

சிலரோ, காதல் பல முறை வரலாமே ! அதிலென்ன ஆச்சரியம் என்கின்றனர். சட்டென வானில் தோன்றி சிலிர்ப்பிக்கும் வானவில் போல காதலும் பல முறை வரலாம் என்பது அவர்களுடைய தரப்பு வாதம். ஒற்றைக் காதலுடனும் ஒட்டடைத் தாடியுடனும் அலைவது அவர்களுக்கு ஒத்துவராத விஷயம்.

காதல் என்ன ஒரு முறை தான் வருமா ?

அதிகாலைச் சூரியன் அழகாக வானில் விரல் நீட்டி விழித்தெழுவது போல காதல் வாழ்க்கை சிலருடைய வாழ்க்கையில் முளைக்கிறது. நேரம் செல்லச் செல்ல கதிரவன் தனது வெப்பக் கால்களால் பூமியை உதைத்துத் தள்ளுகிறான். காதல் வாழ்க்கையும் புரண்டு விழுகிறது. மாலையில் மீண்டும் தன் ஓய்ந்த கால்களை உதறிக் கொண்டு மென்மையான விரல்களால் வருடுகிறான். புரண்ட காதல் நிமிர்கிறது. மீண்டும் தன் வெளிச்சக் கூந்தலை அடிவானத்தில் புதைத்து ஒரு தற்காலிக இருட்டுக்குள் நம்மைத் தள்ளுகிறான். காதலும் ஒரு இருண்ட பாதைக்குள் பயணிக்கிறது !

காதலுக்கும், கதிரவனுக்கும் இருக்கும் நம்பிக்கை, மறுநாள் மீண்டும் முளைத்தெழும் என்பது தான். இரவுக்குள்ளேயே புதைந்து கிடந்தால் விடியலின் வெளிச்சம் நம்பிக்கைப் பூபாளத்தைப் பாடாது. மறுநாள் மீண்டும் அது தலைகுலுக்கி எழும்பும். காதலின் சுருக்கங்கள் மீண்டும் நேராக்கப்படும். காதலும் கதிரவனும் மாற்றங்களின் பாதைகளின் தான் வாழ்க்கை ஓட்டத்தைத் தொடர்கின்றனர்.

வாழ்க்கை மாற்றங்களின் அஸ்திவாரங்களில் தான் கட்டப்பட்டிருக்கிறது. மாற்றங்கள் இல்லாத நிலைகளே இல்லை. ஒரு

Chilli Mixx
Catering

உங்கள் மங்கலகர வைபவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!

திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298 +49 176 21303158

தொடர்ச்சி 15 ம் பக்கம்

# காதல் என்பது ஒரு முறை மட்டுமா ?




ஒரு வாக்கியத்தின் முற்றுப்புள்ளி தான் அடுத்த வாக்கியத்தின் துவக்கப்புள்ளி. முதல் வாக்கியத்தோடு எல்லாம் முடிந்து போவதில்லை. முதல் வாக்கியம் தந்த அனுபவமும், இரண்டாம் வாக்கியம் தந்த அனுபவமும் வேறுபடலாம். ஆனால் வாழ்க்கை முதல் வாக்கியத்தோடு முற்றுப் பெறுவதில்லை ! காதலும் அப்படியே !!

நமக்கிருக்கும் ஜீவன் ஒன்று ! அந்த ஜீவன் கொள்ளும் உணர்வுகளும், உறவுகளும் பலப்பல ! ஒற்றைத் தோல்வியுடன் வாழ்க்கையை முடித்துக் கொள்பவர்களும், ஒற்றைக் காதல் விலகியதால் உலகை விட்டு விலகிவிடுபவர்களும் வாழ்வின் எதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள். அல்லது பொய்யான பிம்பங்களை நம்பி தங்களை இழந்தவர்கள். அவ்வளவு தான்.



**வாழ்க்கை என்பது விழுந்த இடத்தில் நமக்கு நாமே கல்லறை கட்டிக்கொள்வதல்ல.**

காதல் என்பது உணர்வு ! அந்த உணர்வுகளை ஒருவர் மட்டுமல்ல பலர் வெளிப்படுத்தலாம். ஒரு அன்னைக்கு முதல் குழந்தை மட்டுமே குழந்தையல்ல, அடுத்தடுத்த குழந்தைகளும் அவளுடைய உயிரின் பாகங்களே. ஒரு மனிதனுக்கு முதல் காதல் மட்டுமே காதலல்ல, தொடர்கின்ற காதல்களும் காதல்களே !

எனில், காதல் என்பது ஒரு உள்ளார்ந்த உணர்வாக எழவேண்டும். ஒரு தாய் தனக்குள் ஒரு கருவைச் சுமக்கும் கண்ணியத்தோடும், ஆசையோடும், எதிர்பார்ப்போடும், அதிகபட்ச அன்போடும் அந்தக் காதலைச் சுமக்க வேண்டும். அந்தக் காதலின் வளர்ச்சியில் சிலாகித்து, அதை வலுவூட்ட சிரத்தை எடுத்து, அது குழந்தையாய் கையில் தவழ்வதை வெற்றி என கொண்டாடவேண்டும். அப்படிச் செய்யாமல் ஏனோ தானோ என காதலை கருக்கலைப்பு செய்பவர்களை காலம் மன்னிக்காது !

உருவான ஒரு காதலை வளர்த்தெடுக்கவும், அதை வலுவூட்டவும், அதைப் பாதுகாக்கவும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டும். அத்தனை பாதுகாப்புகளையும் மீறி காதலைக் கலைக்கும் ஓகி புயல்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அத்தகைய தருணங்களில் காதலோடு சேர்ந்து நமது வாழ்க்கையையும் புதைத்து விடக் கூடாது என்பதே நான் சொல்ல வரும் விஷயம்.

காதலை உதறுவது என்பது வலிமிகுந்த செயல். காதல் உடைவது என்பது மனதை உடைக்கும் செயல். எனினும், தவிர்க்க இயலாத சூழல்கள் காதலைப் பிரிக்கலாம். அந்தப் பிரிவின் பள்ளத்தாக்கில் நாம் புதைபட்டுவிடக் கூடாது. மீண்டும் விடியலின் வானத்தை நோக்கி நம் பார்வையை செலுத்த வேண்டும்.
வாழ்க்கை என்பது விழுந்த இடத்தில் நமக்கு நாமே கல்லறை கட்டிக்கொள்வதல்ல. வலிமையுடன் எழுவதும் தொடர்ந்து நடப்பதுமே ! நதி பயணிக்கிறது. வழியில் அது அருவியாய் விழுகிறது. விழுகின்ற இடத்தில் இறந்து விடுவதில்லை நதி ! அங்கிருந்து அது புதிய வேகமான ஒரு பயணத்தை ஆரம்பிக்கிறது.

பழைய நினைவுகளோ, பழைய காதலின் பக்கங்களோ நமது சிந்தனைகளின் சிலந்தி வலைகளில் சிக்கியிருக்கலாம். அவற்றை உதறிவிட்டு புதிய காதலோடு பயணியுங்கள். வாழ்க்கை என்பது ஒற்றைக் காதலுக்குள் உயிரை அடைப்பதல்ல ! உயரிய காதலுக்குள் உங்களை அடைப்பது !
காதலியுங்கள், காதலிக்கப்படுவீர்கள்.

## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

## மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

Lise-Meitner-Str.20
45144 Essen




Akilan Wedding planner
Grüner Weg-6 53474 Bad Neuenahr-AW, GERMANY
contact : E,Akilan
Professional Photography
e-mail:akchayadigitalphotography20@gmail.com
Tel:02641 91 68 98
Mobile:0163 39 40 474


MV
The Connecting Hearts
MULTIVISION
உலகின் எப் பாகத்திலுமுள்ள
உங்கள் உறவுகளுக்கான துரித பணப் பரிமாற்றத்துக்கு!
5 முறை எம்மிடம் பணப் பரிமாற்றம் செய்தால்
6வது தடவை அனுப்பும் வாடிக்கையாளருக்கு 14,99€ பெறுமதியான
Lyca Mobile ன் Srilanka Flat/30 Days 3GB இணைய பாவனை,
ஜேர்மனி வரையறையற்ற அழைப்பு, இலங்கை 250 நிமிடங்கள் இலவசம்!
MoneyGram.
ACE money transfer
VT VALUTRANS
MONEY TRANSFER - MONEY EXCHANGE
Lyca TV Receiver + 1 வருட சந்தா
புதியது €69
புதுப்பித்தல் €49
14,99€ /30 Days
Srilanka Flat
3GB Data
250 Min to Srilanka
Unlimited Germany
Movies
TENTKOTTA
Tamil Movies
INCLUDED
Rheinische Str. 56 44137 Dortmund | T.P : 0049 231 589 77 140

## "சுராங்கனி.. சுராங்கனி.. சுராங்கனிட மாலுகெனாவா..."

# பிரபல பொப்பிசை சக்கரவர்த்தி ஏ.இ.மனோகரன் மறைவு!





பிரபல பொப்பிசை பாடகரான சிலோன் மனோகர் என்றழைக்கப்படும் ஏ.இ.மனோகரன் தனது 73 ஆவது வயதில் சென்னையில் (22.01.2018) காலமானார்.



ஏ.இ.மனோகரன் புகழ்பெற்ற பொப் இசைப் பாடகரும் திரைப்பட நடிகரும் ஆவார். பல மொழிப் பாடல்கள் பாடுவதிலே திறமை வாய்ந்தவர். பொப் இசைச் சக்கரவர்த்தி எனப் பாராட்டுப் பெற்றவர். இவருக்கு இலங்கையில் மட்டுமன்றி உலகமுழுவதிலும் பல ரசிகர்கள் உள்ளனர்.

இவர் பாடிய "சுராங்கனி.. சுராங்கனி.. சுராங்கனிட மாலுகெனாவா..." என்ற பைலா பாடல் நம் நாட்டு சிங்கள மற்றும் தமிழ் இரசிகர்கள் மாத்திர மல்லாது உலகளாவிய ரீதியில் ரசிகர்கள் மத்தியில் பேராதரவைப் பெற்றது. அத்துடன் அந்தப்பாடலை ஹிந்தி, மலையாளம், பேரர்த் துக்கீஸ் உள்ளிட்ட பல மொழிகளிலும் பாடி உலக கலைஞர்களின் பாராட்டைப் பெற்றவர்.

வடை வடை என விற்றுவந்தாள் வாயடிக் கிழவி. பாட்டும் சிறுவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

நீண்டகாலமாக சென்னையில் வாழ்ந்து வந்த ஏ.இ.மனோகரன், இந்தியக் கலைஞர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் அவர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் மேடைகளில் பொப்பிசைப் பாடல்களை பாடி இளைஞர்களின் மனதில் இடம்பிடித்தார்.

இவர் சிலோன் மனோகர் என்ற பெயரில் தென்னிந்தியத் திரைப்படங்களிலே நடித்தும் பாடியும் வந்தார்.



Semiyon (AE Manoharan) and Philomina (Chandrakala)

1970, 1980 களில் இலங்கை வானொலி யிலும் அவரது பாடல்கள் தினமும் ஒலிபரப்பட்டு வந்தன. மனோகரன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

தமிழ், இந்தி திரைப்படங்களில் நடித்துள்ள மனோகர் தமிழ் தொலைக்காட்சி தொடர் களிலும் நடித்துள்ளார்.

"வாடைக்காற்று" "பாசநிலா" " புதிய காற்று" ஆகிய பல ஈழத்து தமிழ் திரைப் படங்களிலும், "ஜே ஜே" போன்ற தென்னிந்திய தமிழ் திரைப்படங்களிலும் மனோகரன் நடித்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசனுடன் 'மனிதரில் இத்தனை நிறங்களா' படத்தில் பாடி நடித்துள்ளார்.

இவரின் புகழுடல் பொதுமக்கள், கலைஞர்கள் உள்ளிட பலதுறையினரின் அஞ்சலிக்குப் பின்னர், எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை சென்னையில் தகனம் செய்யப்படும் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்..




### வாடைக்காற்று நினைவலைகள்

டாக்டர் இந்திரகுமார்.ஆனந்தராணி மற்றும் யு.நு.மனோகரனும் சந்திரகலாவும். தோன்றும் காட்சிகள்.


## S.J. ASIAN - AFRO STORE








உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்

பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப்
பயனடையுங்கள்.

**Mannheim**
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



**Indo Afro Travels**
**68161 Mannheim**

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€ 69

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்
£/€ 49
14 மாதங்கள்



LycaTV App ஐ Download செய்து பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா £/€ 4.99 மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · ZEE தமிழ் · KTV · SUN · Athavan TV · JAYA TV HD · Lyca Classic

1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்




UNITED KINGDOM
0207 132 2727

GERMANY
069 1200 7102

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv

"இலக்கியச் செம்மல்"
இந்துமகேஷ்

# புழுகு

5



## "இது பொய்யல்ல மெய்"

**தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கும் இளைய தலைமுறை!**

## வானில் பறக்கும் தென்மராட்சி உபாத்தியாயர் குடும்பத்து வாரிசுகள்!



தென்மராட்சி சங்கத்தானையைச் சேர்ந்த பொன்னையா ஆசிரியர் அவர்களின் 3வது மகனான குலதாசன் மீனா தம்பதிகளுக்கு ஆண்பிள்ளைகள் மூவர். ஜகன் , ஆனந்த் , அசோக்.

இவர்களில் மூத்தமகன் ஜகனை அவனது முதலாவது வயதிலிருந்தே பைலட் ஜகன் என அழைத்து அவனை பைலட் ஆக்கிப் பார்க்கவேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை அவனிடத்தும் வளர்த்தார்கள் .நாளடைவில் தனது உறவினர் நண்பர்களுக்கெல்லாம் நான் ஒரு பைலட் ஆக வருவேன் எனக்கூறி பெருமைப்பட்டுக் கொள்வார் ஜகன்.

பெற்றோரின் விருப்பப்படியே பைலட்டாகவும் வந்தார்.

அவரைத் தொடர்ந்து இரண்டாவது மகன் ஆனந்தையும் பைலட்டிற்குப் படிக்க வைத்தார்கள்.

அவரும் பெற்றோர்களின் விருப்பப்படி படித்து பைலட் ஆக வெளியேறினார்.

தற்போது ஜகன், ஆனந்த் இருவரும் பைலட் ஆக வானில் வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி தமிழ்க்குடி!


ஜகன்


அசோக்
[குட்டிப் பண்டிதர்]

இப்படியான தமிழன்வரலாற்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஜகன் ஆனந்த் சகோதரர்கள் விமானிகளாக (Commercial Pilot) வந்ததன்மூலம் தென்மராட்சிக்கு மட்டும் அல்ல தமிழ் இனத்திற்கும்

பெருமை தேடித்தந்தவர்களாவார்கள். இப்படி தமிழர் வரலாற்றில் தடம்பதித்த இவர்கள் உலகத்தமிழர்களின பாராட்டுக்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

ஒரே சமயத்தில் தமது இருமகன்களையும் விமானிகளாக உருவாக்குவதில் கடுமையாக உழைத்த குலதாசன்- மீனா தம்பதிகளின் கடுமையான உழைப்பும் இங்கு பாராட்டிற்குரியது.

புலம்பெயர்ந்து தற்போது ஜெர்மனி பிறேமன் நகரில் வாழ்ந்துவரும் குலதாசன் குடும்பத்தினர் தமது அயரா உழைப்பின் மூலம் தமிழினத்துக்குப் பெருமை தேடித் தந்துள்ளாகள்.

தமது இருமகன்களையும் விமானிகளாக உருவாக்கியதுபோல் தமது மூன்றாவது மகனான அசோக் குலதாசனையும் ஒரு விமானியாக்குவதன்மூலம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று ஆண்பிள்ளைகளும் விமானிகளாகி கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்கவேண்டும் என்பதே அவர்களின் கன வாகும். பெற்றோரின் விருப்பிற்கமைய அசோக் குலதாசனும் தற்போது Flight Engineer ஆக ஜெர்மனியில் பணியாற்றிவருகிறார்.

Ashog Kulathasan: In England: 1) Master MSc in Aerospace Propulsion 2) Calculation Engineer at Rolls Royce UK3) Masterthesis at Rolls Royce and received a patent for invention (invention of a novel hybrid-electrical jet engine)

**குலதாசன் தம்பதிகளின் கனவு நனவாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை.**

உபாத்தியாயர் குடும்பம்:

திரு குலதாசன் அவர்களின் தாத்தா சபாபதி- அவரது துணைவியார் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளுக்கு சுப்பையா, வேலுப்பிள்ளை, பொன்னையா, கந்தையா என 4ஆண்பிள்ளைகளும் அன்னப்பிள்ளை என்னும் ஒரு பெண்பிள்ளையும் இருந்தார்கள். இந்தக் குடும்பம் உபாத்தியாயர் குடும்பம் என்றே இன்றுவரை அவ்வூர்மக்களால் கௌரவிக்கப்பட்டு வருகிறது உபாத்தியாயர் குடும்பம் என்று அழைக்கப்பட்டு வருவதற்குக் காரணமா யமைந்தது பிள்ளைகள் அனைவருமே ஆசிரியர்களாக இருந்ததனால்தான். மூத்தமகன் சுப்பையா - தலைமை ஆசிரியர் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அடுத்த மகன் வேலுப்பிள்ளை - ஆசிரியர் (கமலாம்பிகை வித்தியாசாலை) 3வது மகன் பொன்னையா - ஆசிரியர் (மீசாலை வீரசிங்கம் மகாவித் தியாலயம்) 4வது மகன் கந்தையா - ஆசிரியர் (வவுனியா தமிழ்க்கலவன் பாடசாலை)இப்படி ஒரேகுடும்பத்தில் எல்லாப் பிள்ளைகளும் ஆசிரியர்களாக இருந்ததாலும் மாணவர்களுக்கு நல்வழி அறிவுரைகள் கூறி அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களை ஒழுக்கம் சார்ந்த பிள்ளைகளாக வருவதற்கு காரணமாக இருந்தவர்கள் என்பதனாலேயே உபாத்தியாயர் குடும்பம் என கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் பெண்பிள்ளையான அன்னப்பிள்ளை (அந்தக் காலத்தில் பெண்கள் வேலைக்குப போவதில்லை இருந்தாலும்) தனது மகளான மீனாட்சிப்பிள்ளையை படிப்பித்து ஒரு ஆசிரியையாக வரவைத்து மேலும் உபாத்தியாயர் குடும்பத்திற்கு வலுச்சேர்த்தார்.

(திருமதி மீனாட்சிப்பிள்ளை திருஞானசம்பந்தர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை)இந்த வழியில் மூன்றாவது மகனான பொன்னையா ஆசிரியரின் 4வது மகன் திரு. குலதாசன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09





Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany

அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப் பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்

# புளகு

21 ம் பக்கத் தொடர்ச்சி...




பூவரசு 5வது ஆண்டு நிறைவுக் கலை இலக்கியமாலை 1996 நிகழ்வுக்கென இயல் இசை நாடகம் என முத்தமிழும் இணைந்த முத்துக்கள் மூன்று என்னும் தலைப்பிலான கதம்பத்தை எழுதினேன்.

ஜகன், ஆனந்த், அசோக் என்னும் சகோதரர்கள் மூவரும் முத்துக்கள் மூன்றாக அதில் பங்குகொண்டு அந்த நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்த்தார்கள். அவர்களது கலைத்திறமை அவர்களை முத்துக்கள் மூன்று என் கலை ஆர்வலர்களால் பாராட்டுப்பெற வைத்தது.

தொடர்ந்தும் பலமேடைகளில் தமது கலைத்திறமையை வெளிப்படுத்திய அவர்கள் கல்வியிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்ந்தார்கள்:

**இளையவர் அசோக் வெற்றிமணி விழாவில் மதுரகவி கந்தவனம் அவர்களால் 1995 ஆண்டு குட்டிப்பண்டிதர் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. அன்று அவர்களது கலைத்திறமையைக் கண்டுகொள்ள எனக்கு உதவியது முத்துக்கள் மூன்று என்பதில் எனக்குப் புளகமே.**

தமது அயரா முயற்சியால் தமது பிள்ளைகளை உயர்நிலைக்குக் கொண்டு வந்துள்ள திரு, திருமதி குலதாசன் - மீனா தம்பதிகள் தமிழினத்துக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள் எனில் அது மிகையல்ல.

# என் பாதை

12ம் பக்கத் தொடர்ச்சி

லண்டனில் உள்ள நமது தாயகக்கலைஞனின் டிபிபி நிறுவனம் தனது 12வது படைப்பான"என்பாதை" ஆல்பத்தின் இசை வெளியீட்டு விழாவை

பின்னர் குறுந்தகடு வெளியிடப்பட்டது. இசையமைப்பாளருடன் டி.எம்.இ இயக்குனர் கவிதா, தேனாண்டால் பிலிம்ஸ் கவிதா, கிடாரி இயக்குனர் பிரசாத் முருகேசன், டாக்டர் ஜான் பால், பாடகர் ஆலாப் ராஜு, இளம் இயக்குனர்கள் சம்பத், பிரபு மற்றும் எழுத்தாளர் சேவியர் ஆகியோர் விழா மேடையில் இருக்க இசைத்தகடு வெளியிடப்பட்டது.

ஆல்பத்திலுள்ள அனைத்து பாடல்களுக்கும் ரசனையான வீடியோ காட்சிகள் பதிவாக்கப்பட்டு சின்னச் சின்னக் குறும்படங்களைப் போல திரையிடப்பட்டது விழாவை சிறப்பாக்கியது. தாயே, ரயில், விலக விலக, உன்னைப் பார்க்கும் போது, 1 2 3 4 5 6 7, பகலிரவு என பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான படக்காட்சியுடன் பிரமிக்க வைத்தன. பாடல்களை இயக்குனர்கள் சம்பத், பிரபு,இலங்கை பிரதீபா, கவிதா பாலிகா ஆகியோர் இயக்கியிருந்தனர். விழாவின் இடையில் பார்வையாளர்களின் கேள்விகளுக்கான பதிலையும், இந்த இசை ஆல்பத்தின் சுவாரஸ்ய அனுபவங்களையும் ஆல்பத்தில் பணியாற்றிய கலைஞர்கள் பகிர்ந்து கொண்டனர்.

இப்படி ஒரு இசை ஆல்ப வெளியீட்டை இப்போது தான் முதன் முறையாய்ப் பார்க்கிறேன் என பிரபல பின்னணிப் பாடகர் ஆலாப் ராஜு வியப்புடன் சொன்னது விழாவின் ஒட்டு மொத்த வெற்றியை சுருங்கச் சொல்லும் ஒற்றை வாக்கியம் எனலாம் !








# பெண்ணின் பின்னால் உள்ள விஞ்ஞானம்

**சிந்தனை சிவவினோபன்**



பெண் பலவீனமானவள் அவளை பாதுகாக்கவே ஆண்களை பலமாகப் படைத்தான் ஆண்டவன், என்ற கருத்து உங்களுக்கும் இருந்தால். தயவுசெய்து உங்கள் ஐந்து நிமிடத்தை என்னோடு செலவழியுங்கள். ஐந்து நிமிடத்தின் பின்னும் உங்களுக்கு அதே கருத்து இருக்கின்றதா? என்று உங்களை சரிபார்த்துக்கொள்ளவும்.




ஆண் பெண் என்ற பாகுபாடு இயற்கையின் அற்புதம். இயற்கை தன்னை வளப்படுத்திக் கொள்வதற்காக உருவாக்கிய புனிதமான விடயம் தான் ஆண் பெண் இணைவு. இந்த இயற்கையின் ஆரம்பத்தில் ஆண் பெண் வேறுபாடு காணப்படவில்லை.

இயற்கை உயிரை உருவாக்கும் போது நீரின் அடியில் நுண்ணுயிராக உருவாக்கி அதுவே மீனாகி, ஈருடக வாழிகளாகி மண்ணுக்கு வந்தடைந்து இன்று மனிதன் வரை உருவாக்கியுள்ளது.
அந்த வகையில் ஆரம்பத்தில் ஆண் பெண் வேறுபாடு காணப்படவில்லை, நுண்ணுயிர்கள் தம்மைத்தாமே இனம்பெருக்கிக் கொண்டது. ஒருகட்டத்தில் இயற்கையின் அற்புதமான பரிணாம வளர்ச்சியால் பெண் ஆண் என்ற வேறுபாடு இருவர் இணைய இயற்கையின் படைப்பு உருவாகும் என்ற கோட்ப்பாடு உருவாகியது.



ஒரு பெரிய மத நூலில் கூறியதை போன்று முதலில் ஆணை உருவாக்கி அதைத் தொடர்ந்து பெண் உருவாக்கப்பட்டாள் என்ற எண்ணக் கருத்துக்கூட உள்வாங்கி கொள்ளலாம். இயற்கையின் பரிணாம வளர்ச்சியில் தன்னினத்தைப் தானே தனியாக இனம்பெருக்கிக் கொண்டிருந்த உடலமைப்பு காலவோட்டத்தில் ஆணாக மாற, இனப்பெருக்கம் தடைப்பட்டது.
அதை தொடர்ந்து ஆணின் உடலமைப்போடு இணைந்து இசைந்து இயற்கையை உருவாக்கும் உடலமைப்பாக பெண் உடலமைப்பு என்ற பரிமாண வளர்ச்சியில் உருவாகியது.
இப்படித் தான் பெண் உருவானாள், இப்போது ஒரு முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதை விளங்கிக் கொள்வதற்காக தற்போதைய தொழிநுட்ப உவமான உவமேயம் ஒன்றைப் பயன்படுத்தப் போகின்றேன். உதாரணத்திற்காக iPhone ஒன்றைப் பார்ப்போம் iPhone 6 ஐத் தொடர்ந்து ஸ்ழநெ 7 வந்தது அப்படி வந்த iPhone 7 ஆனது iPhone 6 ஐ விட விருத்தியான தொலைபேசியாகும், அதைத் தொடர்ந்து இப்போது வந்திருக்கும் iPhone 10 ஆனது iPhone 7 ஐ விட விருத்தியானது ஆகும் ஆகவே ஒன்றைத் தொடர்ந்து அடுத்தாக உருவாகும் ஒவ்வொரு விடயமும் பழையதில் உள்ள பிழைகளைத் திருத்தி சிறப்பாக இருக்கும் வகையில் உருவாகும் போது பெண் என்ற பரிணாம வளர்ச்சி ஆணுக்கு அடுத்ததாக உருவாகியது உண்மை என்றால் எப்படி ஆணை விட பலவீனமானவள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
மறைக்கப்பட்டு பெண்களே ஏற்றுக்கொள்ளுமாறு நம்ப வைக்கப்பட்ட உண்மை என்னவென்றால், ஆண்களை விட பெண்கள் 100 மடங்கு வலிமையானவர்கள் என்பது தான்.

எப்படி என்றால், பெண் குழந்தைகள் பெண்தன்மை அடையும் போது அவர்களுக்கு இரத்தப் பெருக்கு ஏற்படும் அந்த இரத்த பெருக்கு ஆணுக்கு ஏற்பட்டால் ஆணின் உடல் அரை மணிநேரத்தில் சோர்வடைந்து உயிரிழப்பு ஏற்படவும் சாத்தியமுள்ளது. ஆகவே ஆணா பெண்ணா வலிமையானவர் சொல்லுங்கள்?
இன்னுமோர் முக்கிய உதாரணம், பெண்ணின் பிரசவ நேரத்தில் பெண்ணின் இடுப்பெலும்பு விலகி குழந்தை வெளியே வரும் போது ஏற்படும் வலி எட்டு முதல் பதினான்கு மணிநேரம் வரை நீடிக்கும். அந்த வலி எப்படி இருக்கும் தெரியுமா? ரோஜா மொட்டு விரியும் போது அணுகுண்டு வெடிக்கும் சத்தம் எழுவது போல, குழந்தை பிரசவிக்கும் போது எப்படி இருக்கும் என்றால், உயிரோடு இருக்கும் ஒருவருடைய எலும்புகளை முறித்தால் அதுவும் அவர் மயக்கத்திலோ உறக்கத்திலோ இல்லாமல் விழித்திருக்கும் போது முறித்தால் எப்படி வலிக்குமோ அதை விட பெரிய வலி ஒன்று இருக்கின்றதென்றால் அது தான் இந்த குழந்தை பிரசவிக்கும் வலி.
இப்போது சொல்லுங்கள் இப்படி அனைத்து வலிகளையும் பொறுத்துக் கொள்ளும் பெண்ணா, ஆணா பலமானவர்கள்? அப்படி என்றால் ஏன் ஆண்கள் பலமானவர்கள் என்று பெண்களே ஒத்துக்கொள்கின்றனர்? அது எப்படி சாத்தியமானது? ஏன் ஆண்களின் ஆணைக்கு அடிபணிந்து பெண்கள் பயந்து வாழ்கின்றனர் என்ற கேள்விக்கு பதில் மிகவும் சுவாரஷ்யமானது . ஆணுடைய உடல் பெண்ணுடைய உடலை விட உறுதியானது என்பது தான் ஆண் பெண்ணை அடக்கியாள முக்கிய காரணம் ஆனால் அது ஆண்களின் சதி, எம்முடைய உடல் சிறுவயதில் இருந்து பழக்கப்படுத்துவதால் உறுதியா கின்றது. ஆதி காலத்தில் ஒவ்வொருவர் வீட்டிலும் பெண் குழந்தை களை சமையல் போன்ற சிறிய வேலைகளுக்கும் ஆண்குழந்தைகளை பெரிய கடின வேலைக்குக்கும் பழக்குவார்கள் அப்போது ஆரம்பமானது இந்த ஆண் பெண் அரசியல்.
உதாரணத்திற்கு கிராமப்புறத்தில் முன்பெல்லாம் இளைஞர்கள் மிகப்பெரிய காளை மாட்டை கட்டியணைத்துத் தூக்குவார்கள். அதற்க்கு காரணம் அந்த மாடு சிறு கன்றாக இருக்கும் போதே தினமும் அதைத் தூக்கித் தூக்கி அதன் பாரம் பழகிப் போன காரணத்தால் அது பெரிய காளை மாடாக மாறிய பின்பும் அதைத் தூக்குவது அவர்களுக்கு கடினமான விடயமல்ல. இவ்வாறு ஆணின் உடலை கடினப்படுத்தி வலிமை மிக்கவராக்கும் பெற்றோர், பெண்ணினி உடலை அழகு படுத்தி மெதுமைப்படுத்தினர். அதன் காரணத்தால்த் தான், ஆண் பெண்ணை விட வலிமை என்ற நிலை உருவானது. ஆரம்பத்தில், தான் அழகாக இருக்கவேண்டும் என்று ஆசையில் மயங்கிய பெண்கள், காலப்போக்கில் அது தம்மை அடிமைப்படுத்தும் என்பதை சிந்திக்காமல் விட்டுவிட்டார்கள். பல நாகரீகம் கலந்து இப்போது பெண்களே தங்களை உறுதியானவர் என்று நம்ப மறுக்கின்றனர்.
இதை வாசிக்கும் நீங்கள் பெண்கள் என்றால், இனிமேல் நினைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் ஆண்களை விட உடலிலும் மனதிலும் பலமான வர்கள். அதுவே இதை வாசிக்கும் நீங்கள் ஆண்கள் என்றால் உங்களை சுற்றி வாழும் பெண்கள் பலவீனமானவர்கள் என்ற சிந்தனையை மாற்றிக்கொள்ளுங்கள். பெண்ணுக்கு சமஉரிமை கொடுக்கும் உரிமையை, ஆணுக்குக் கொடுத்தது யார்? விழித்துக் கொள் பெண்ணே வெற்றிபெற.
















யேர்மனியின் மாபெரும் பொங்கல் விழா பீலபெல்ற் மாநகரத்தில் கடந்த 14.01.2018 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.பீலபெல்ற் தமிழ்மக்களும், வர்த்தகர்களும் இணைந்து வருடாவருடம் சிறப்புற நடைபெறகின்ற விழா தைத்திருநாள் பெருவிழா. படங்கள்.நந்தபாலன்.









டோட்மூண்ட்
**தமிழர் அரங்கத்தில் பொங்கல் விழா**





இந்த ஆண்டும் (14.01.2018) டோட்மூண்ட் தமிழர் அரங்கத்தில் இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் மற்றும் கடவுள் மறுப்பாளர்கள் என்று எல்லோரும் இணைந்து பொதுவான தமிழர் திருநாளாக தைப் பொங்கலைக் கொண்டாடினார்கள். பாரம்பரியக் கலைவடிவங்களையும் மேடையேற்றினர். படங்கள்: உகந்தன்


விநாயகா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமேரிக்கா
போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும்
பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

**பண்டித் துர்க்கா பிரசாத்**

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம்,
பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம்
வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ
முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாகத் தொந்தரவுகள்,
கண்திருஷ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
**உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!**
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை

Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach





# "இருக்கிறேன்"



ஏலையா.க.முருகதாசன்

"அண்னை விதுசாவுக்கு வாற சனிக்கிழமை வீட்டிலை வைச்சு தண்ணி வார்த்து வீட்டோடை சின்ன விழாவாகச் செய்யப் போகிறோம், கட்டாயம் நீங்களும் அண்ணியும் வந்து சந்தோசமாய் தாய்மாமன் மாதிரிச் செய்ய வேண்டும்" என்று கல்யாணி தொலைபேசியில் சொன்ன வார்த்தைகளை அசைபோட்டபடி வேலைத்தளத்திற்கு காரில் போய்க் கொண்டிருந்தேன்.

இரண்டு நாட்களுக்கு முன் சனிக்கிழமை கல்யாணி தொலைபேசி மூலமாக கதைத்தவள் மனைவியுடனும் கதைத்திருந்தாள்.
கல்யாணிக்கு நான் கூடப்பிறந்த அண்ணனோ அல்லது இரத்த உறவு முறைகளினூடாக வந்த அண்ணனும் இல்லை. ஒரே ஊரும் அல்ல.அவள் கரணவாய் என்ற ஊரையும், நான் கோண்டாவில் என்ற ஊரையும் சேர்ந்தவன்.

ஆனாலும் அவள் என்னை அண்ணை என்று பாசத்தோடு அழைத்து வந்தாள். ஒரு வருடத்திற்கு முன்பு நானும் மனைவியும் கல்யாணி இருந்த நகரத்தில் நடைபெற்ற ஒரு திருமண விழாவிற்கு போயிருந்தோம். அப்பொழுது எனது நண்பரின் குடும்பமும் எங்களுக்கருகில் உட்கார்ந்திருந்தனர்.

அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது இரண்டு சிறுமிகளுடன் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு இளம் பெண் வந்து நண்பரின் குடும்பத்துக்கு அருகில் உட்கார்ந்தாள்.எங்கள் இரண்டு குடும்பத்தினரையும் பார்த்து அந்த இளம்பெண் புன்னகை செய்தார். நண்பர் "எப்படியிருக்கிறியள்" என்று கேட்க "இருக்கிறன்" எனச் சிரித்துக் கொண்டே சொன்னார். அவள் சிரித்தக் கொண்டு சொன்னாலும்"இருக்கிறன்" என்ற வார்த்தையில் ஏதோ ஒரு வேதனை இருப்பதை நான் கவனித்தேன்.

விருந்து முடிந்து அந்த இளம்பெண் மணமக்களுடன் நின்று படம் எடுப்பதற்காக எழுந்து போனதும் நண்பர்" இந்தப் பிள்ளைக்கு புருசன் இறந்துவிட்டார், பாவம், வயது குறைவு" என நெகிழ்வுடன் சொன்னார். எனக்கும் மனைவிக்கும் அதிர்ச்சியாக இருந்தது."புருசனுக்கு என்ன நடந்தது" என்று கேட்ட போது" இளந்தாரியாக இருந்த போதே நல்ல குடி, குடியாலை உடம்பு கெட்டுப் போச்சுது, இந்தப் பிள்ளையையும் இந்தச் சின்னதுகளையும் தவிக்க விட்டிட்டு அந்தாள் போய்ச் சேர்ந்திட்டுது என்று கவலையோடு சொன்னார் நண்பர். "காதலித்துக் கல்யாணம் நடந்ததா... இல்லை...." என்று நான் முடிக்கு முன் " இல்லை பேசித்தான்" என்றார் நண்பர்.

நண்பர் சொன்னதைக் கேட்டதும் நானும் மனைவியும் அந்த இளம் பெண்ணின் வாழ்க்கையைப் பற்றி யோசித்தோம். நாங்களும் நண்பரின் குடும்பமும் அவளினதும், அவளின் பிள்ளைகளினதும் எதிர்காலம் பற்றியே அனுதாபத்துடன் பேசிக் கொண்டிருந்தோம். மணமக்களுடன் சேர்ந்து படம் எடுத்த அவள் மீண்டும் வந்து உட்கார்ந்தாள். என்னைப் பார்த்து, உங்களைப் பற்றி அறிந்திருக்கிறன் என்றவள் நீங்கள் கதை எழுதுகிறவர்தானே, உங்கள் கதைகளை வாசித்திருக்கிறன்" என்றாள்.அவள் சொன்னதைக் கேட்டு என்னால் மகிழக்கூட முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங் களுக்குள் அறிமுகமான ஒருத்தியின் வாழ்க்கை, பூஞ்சோலையாக வாழ வேண்டியவள் இருபத்தைந்து வயதில் விதவையாகி நிற்கிறாளே என்ற கவலை என் எழுத்தை நினைத்து மகிழ்ச்சி கொள்ள வைக்கவில்லை. அவள் யாரோ நான் யாரோ ஆனால் அவளின் "இருக்கிறன்"என்ற வார்த்தைக்குள் அவள் தனது வேதனைகளை புதைத்திருப்பதை என்னால் உணர முடிந்தது.

நாங்கள் திருமண நிகழ்விலிருந்து வெளிக்கிடும் முன் அவள் வெளிக்கிட்டு விட்டாள். வெளிக்கிடும் போது "அண்ணை நான் வாறன்" என்று அவள் பாசமாக என்னிடம் சொன்னது ஒரு கூடப் பிறந்த அண்ணனிடம் பாசமாகச் சொன்னது போல இருந்தது.
எனது மனைவியும், "அடிக்கடி சொல்லி கவலைப்படுவியளே கூடப் பிறந்த பெண் சகோதரி இல்லையென்று இப்ப உங்களுக்கு ஒரு தங்கச்சி கிடைச்சிட்டுது போல" என்றாள்.

மனைவி சொன்ன கிடைத்துவிட்டது என்பது. ஒரு நாற்பது வருடங்களுக்கு முன்பு என்றால் அது வேறு உறவாக அல்லவா கிடைத்திருக்கும். இப்பவும் என்மனம் என் மனைவிக்கு அந்த உண்மையைச் சொல்ல துணியவில்லை. அவள் எனக்கு அன்று கிடைக்கவில்லைத்தான். ஊர் வேறு வேறாக இருக்கலாம் நாம்படித்த பல்கலைக்கழகம் ஒன்றே. காதல் கீதல் என்று நமக்குள் எதுவும் இல்லைத்தான். இருந்தாலும் பச்சை சிவப்பு கொட்டன் சேலையோடு நெற்றியில் ஒரு திருநீற்றுக் கோட்டோடு வந்து போகும் போது எல்லாம் என் நெஞ்சுக்குள் எதோ கிறுக்கிச் சென்றதை இந்தக் கிறுக்கனால் மறுக்கமுடியவில்லை.
ஆனால் இப்போ அவள் சொன்ன "இருக்கிறேன்" என்றவார்த்தைக்கு பின்னால் உள்ள துயரத்தை மறக்கமுடியவில்லை..



# உடல் எடையை குறைக்கும் அற்புதமான கறிவேப்பிலை




கறி வேப்பிலை மரம் தென்னிந்தியா மற்றும் இலங்கை மலேசியா போன்ற நாடுகளில் காணப்படுகிறது. இந்த கறிவேப்பிலை நிறைய மருத்துவ குணங்களை தன்னுள் கொண்டுள்ளது. இந்த கறி வேப்பிலையை கொண்டு தயாரிக்கப்படும் தேநீர் பண்டைய காலத்தில் நிறைய நோய்களுக்கு மருந்தாக பயன்பட்டுள்ளது.

இதன் பயன்கள் அதிகம். எனவே தான் இந்த அற்புதமான கறிவேப்பிலை டீ யைஎப்படி வீட்டிலேயே தயாரிக்கலாம் என்பது பற்றியும் அதைக் கொண்டு உடல் எடையை எப்படி குறைக்கலாம் என்பது பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

உடலிலுள்ள நச்சுக்களை வெளியேற்றுதல்

உடலிலுள்ள நச்சுக்களை வெளியேற்றுதல் உடல் எடை அதிகரிக்க நிறைய காரணங்கள் இருக்கின்றன. அதிகமான உணவு எடுத்தல், ஆரோக்கியமற்ற மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் சாப்பிடுதல், காலை உணவை தவிர்த்தல், சீரண மண்டல பிரச்சினைகள் மற்றும் உடலில் நிறைய தேவையில்லாத நச்சுக்களின் தேக்கம் இவற்றால் உடல் எடை அதிகரிக்கிறது.

இந்த கறிவேப்பிலை டீ உங்கள் உடலில் தேங்கியுள்ள கெட்ட கொழுப்புகளையும் நச்சுக்களையும் வெளியேற்றி உடல் எடையை குறைக்க உதவுகிறது. அதிகமான கொழுப்பு உடலில் தங்குவது தடுக்கப்படுகிறது. சீரண சக்தியை அதிகரித்தல் சீரண சக்தியை அதிகரித்தல் கறிவேப்பிலை டீ, ஒரு அற்புதமான மூலிகை ஆகும். இதிலுள்ள சத்துக்கள் நமது சீரண சக்தியை அதிகரித்து பேதி ஏற்படுவதை தடுக்கிறது.

**இரத்த சர்க்கரையை குறைக்கிறது**

இரத்த சர்க்கரையை குறைக்கிறது .நீங்கள் சர்க்கரை அதிகமான உணவையோ பானங்களையோ எடுத்து கொண்டால் இரத்த சர்க்கரை அதிகமாகி விடும். எனவே இந்த அதிகமான சர்க்கரை கரையாமல் அப்படியே கொழுப்பாக படிந்து விடும். இதுவும் உடல் எடை அதிகரிக்க காரணமாகி விடும். கறி வேப்பிலை நமது இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைத்து அவை கொழுப்பாக மாறுவதையும் தடுக்கிறது. மேலும் நீரழிவு போன்ற நோய்கள் வராமல் தடுக்கிறது.

சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்ஸிடன்ட்

சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்ஸிடன்ட் கறி வேப்பிலையில் உள்ள கெமிக்கல் பொருளான கார்போஷோல் அல்கலைடு ஒரு பாதுகாப்பு வீரர்கள் போல் செயல்பட்டு நமது உடலை பாக்டீரியா மற்றும் நோய் கிருமிகளிடமிருந்து நம்மை காக்கிறது. கறி வேப்பிலையில் உள்ள மற்றொரு பொருள் லினோல் மாதிரி ஒரு மருத்துவ குணம் வாய்ந்ததாக செயல்படுகிறது. வெட்டுக் காயங்கள் மற்றும் தீக்காயங்களை சரி செய்தல் நீங்கள் டீ தயாரித்த பிறகு எஞ்சியுள்ள இலையை நசுக்கி வெட்டுப்பட்ட காயங்கள் மற்றும் தீக்காயங்களில் போட்டால் போதும் குணமாகி விடும். இதற்கு காரணம் கறிவேப்பிலையில் உள்ள மகானிமபைசின் என்ற பொருள் காயங்களை ஆற்றுகிறது.

மேலும் பாதிக்கப்பட்ட மயிர்கால்களில் உள்ள புண்களையும் சரி செய்கிறது.

உடல் எடையை கட்டுக்குள் வைத்தல்

உடல் எடையை கட்டுக்குள் வைத்தல் ஒரு கப் கறிவேப்பிலை டீ குடிப்பதால் உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும். மேலும் கொழுப்புகள் இதிலுள்ள மருத்துவ பொருட்களான மகானிமபைசின் மற்றும் கார்போஷோல் போன்ற பொருட்களால் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மலச்சிக்கலை தடுத்து டயரியாவை தடுக்கிறது மலச்சிக்கலை தடுத்து டயரியாவை தடுக்கிறது கறிவேப்பிலை சீரண் சக்தியை அதிகரிக்கிறது. மேலும் நமது சீரண மண்டலம் சரியாக வேலை செய்ய உதவுகிறது. சீரண குடல்கள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.

கறிவேப்பிலையில் சிறுதளவு லாக்ஷியேட்டிவ் பொருட்கள் இருக்கும். இந்த கறிவேப்பிலையை போட்டு தேநீர் தயாரிக்கும் போது இவை குடலில் உள்ள கெட்ட பாக்டீரியாக்களை அழித்து டயரியா ஏற்படுவதை தடுத்து மலச்சிக்கலையும் களைகிறது.

அழுத்தத்தை குறைக்கிறது

மன அழுத்தத்தை குறைக்கிறது கறிவேப்பிலை உங்கள் மன அழுத்தத்தை குறைக்கும் ஒரு அருமருந்தாகும். எனவே இந்த கறிவேப்பிலை டீ குடித்த பிறகு மிகவும் ரிலாக்ஸ் ஆக இருப்பீர்கள். நினைவாற்றல் அதிகரித்தல் நினைவாற்றல் அதிகரித்தல் கறிவேப்பிலையை தொடர்ந்து உணவிலோ அல்லது தேநீராக சேர்த்து கொண்டு வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும் என்று ஆராய்ச்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ஆராய்ச்சி படி இது அம்னீசியா மற்றும் அல்சீமர் நோய் வராமல் தடுக்க உதவுகிறது.

காலை உடல் நல பாதிப்பு மற்றும் குமட்டலை தடுத்தல் நீங்கள் பயணம் மேற்கொள்ளும் போது வாந்தி குமட்டல் போன்ற பாதிப்புகள் இருந்தால் கறிவேப்பிலை டீ போதும். ஆம் இது உங்கள் பயண பாதிப்புகளை சரி செய்து விடும். அதே மாதிரி கருவுற்ற தாய்மார்களின் காலை உடல் நல பாதிப்புகளை சரி செய்ய உதவுகிறது. கண் பார்வையை அதிகரித்தல் கண் பார்வையை அதிகரித்தல் கறிவேப்பிலையில் அதிகமான விட்டமின் ஏ சத்து உள்ளது. இது உங்கள் கண்பார்வையை அதிகரிக்கிறது. எனவே தினமும் ஒரு கப் கறிவேப்பிலை டீ குடித்தால் போதும் இனி கண்ணாடி போட வேண்டிய வேலையே கிடையாது. மேலும் கண்களில் ஏற்படும் வறட்சி மற்றும் அழுத்தத்தை குறைக்கிறது. புற்றுநோயை தடுக்கிறது புற்றுநோயை தடுக்கிறது ஜப்பானில் உள்ள மிஜோ பல்கலைக்கழக ஆராய்ச்சி படி பார்த்தால் கறிவேப்பிலையில் உள்ள கார்போஷோல் அல்கலைடு பொருள் புற்று நோய் செல்களுக்கு எதிராக செயல்படுகிறது.


பொதுவாக குடல் புற்று நோய், இரத்த புற்று நோய் மற்றும் புரோஸ்டேட் புற்று நோய் போன்றவற்றிற்கு எதிராக செயல்படுகிறது. சரி இத்தனை அற்புதங்கள் நிறைந்த கறிவேப்பிலை டீ யை எப்படி செய்வது என்பதை பார்ப்போம்

**கறி வேப்பிலை டீ தயாரிப்பது எப்படி**

எப்படி தேவையான பொருட்கள் 1 கப் தண்ணீர் 30-45 கறிவேப்பிலைகள் செய்முறை ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து தண்ணீரை நன்றாக கொதிக்க வைக்க வேண்டும் 30-45 கறிவேப்பிலைகளை போட்டு இரண்டு மணி நேரம் நன்றாக கொதிக்க விட வேண்டும். தண்ணீரின் கலர் மாறும் வரை கொதிக்க விடவும். பிறகு தண்ணீரை மட்டும் வடிகட்டி மீண்டும் ஒரு முறை சூடுபடுத்தி கொள்ளவும் பிறகு கொஞ்சம் தேன் மற்றும் லெமன் ஜூஸ் ...த







# திருமந்திரமும் வாழ்வியலும் 25

[சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி]

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகள்

(பகுதி 1)

திருமந்திரம் இறைவனை அடைவதற்கான வழிகளாக 1.சுத்த சைவம், 2. அசுத்த சைவம், 3.மார்க்க சைவம், 4.கடும்சுத்த சைவம் ஆகிய நான்கு படி நிலைகளையும், சைவ சித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள 1.சரியை, 2. கிரியை, 3.யோகம், 4.ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் கூறுகிறது. இவற்றை திருமந்திரம் பாடல் எண் 1419

"ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடில்
மேருவும் மூவுல காளியில் அங்குஎழும்
தாரணி நால்வகைச் சைவமும் ஆமே"

உயிர்கள் வாழும் எல்லா உலகங்களையும் ஒரே நேரத்தில் படைக்கின்ற பரம்பொருளின் சிறப்புக்களைச் சொல்ல முற்பட்டால் அது எவராலும் முடியாத காரியமாகும். மேரு மலையையும், மூவுலகங்களையும் படைத்தளித்துக் காக்கின்ற பரம் பொருளின் கருணையினால் உண்டான, விரிந்து பரந்து கிடக்கும் மண்ணுலகும், நாலு வகையான சைவங்களான சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடும்சுத்த சைவம் ஆகும்.

1.சுத்த சைவம் சடங்குகளில் மனம் நிலைபெறாது, சிவனை அறிந்து, தன்னையும் தன்னைப் பிணைந்துள்ள தளைகளையும் கடந்து, தியானம் செய்து இறைவன் திருவடியை அடைதல் சுத்த சைவம் எனப்படும். அதாவது இறைவனை அடைவதற்கான வழிமுறைகளில் மதத்தைக் குறிக்கும் புறச்சாதனங்களை அணிதல் முதல்திலையாகும். திருமந்திரம் பாடல் 1420

"சத்தும் அசத்தும் சத்அசத்தும் தான்கண்டு
சித்தும் அசித்தும் சேர்வுறாமே நீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறாமே நின்ற
சித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே"

நிலைத்த மெய்ப்பொருளான சிவனையும், அழியும் உலகையும், உடம்பையும், அழியும் உடலில் பொருந்தியுள்ள அழிவற்றதான உயிரையும் உணர்ந்தறிந்து, அழிகின்றதான உடம்போடும், உலகோடும் கலந்து மயங்கி நின்றுவிடாமல், இவற்றை விட்டொழித்து, சுத்த, அசுத்த மாயைகள் இரண்டிலும் பொருந்தாமல் தனித்து நிற்கின்ற நித்தியமான பரம்பொருளான சிவபெருமான், சுத்த சைவர்களுக்கு உற்ற துணையாகும்.

2.அசுத்த சைவம்- சைவசமயத்திற்குரிய சின்னங்களை அணிந்து, சரியை (உடம்பால் பூசிப்பது), கிரியை (உடம்பாலும், மனத்தாலும் வழிபடும் அகப்பூசை) என்ற இரண்டு நெறிகளில் நின்று, உபதேசம் பெற்று, சைவ ஆகமங்களைச் சொல்லி, அக ஒழுக்கத்துடனும், புற ஒழுக்கத்துடனும் வாழ்ந்து, பிரணவத்தை உணர்ந்து, மோனநிலை கைவரப் பெற்று அட்டமாசித்திகளை அடைந்து இறைவனைச் சேருதல் அசுத்த சைவம் எனப்படும். அதாவது மனத்தை அடக்கி தளை நீக்குதல் இரண்டாம் நிலையாகும். திருமந்திரம் பாடல் 1423

"இணைஆர் திருவடி ஏத்தும் சீர்அங்கத்து
இணைஆர் இணைக்குழை ஈரணை முத்திரை
குணம்ஆர் இணைக்கண்ட மாலையும் குன்றாது
அணைவாம் சரியை கிரியை யினார்க்கே"

இறைவனுடைய அழகிய திருவடித் தாமரை இரண்டையும் போற்றி வணங்கும் சிறந்ததாகிய இந்த உடம்பில், இரண்டான இரு காதணிகளும், இரண்டான சிவச் சின்னங்கள், இடபம் சூலம் இரண்டுடன், நூலில் கோக்கப் பெற்ற முப்பத்திரண்டு உருத்திராக்க மணிகள் கொண்ட கழுத்தில் அணியும் மாலையும், செபமாலையும் குறையின்றி அணியத்தக்கன, சரியை கிரியை வழி சிவ வழிபாடு செய்யும் அசுத்த சைவர்களுக்கு. (அசுத்த சைவமாவது சிவ்வேடம் பூண்டு சிவச் சின்னம் தரித்து அகப்பூசை செய்யும் முறை)

3. மார்க்க சைவம்- திருநீறு அணிந்து, பொன்னால் செய்த உருத்திராட்சம் அணிந்து, ஆகமக் கருத்துக்களை உணர்ந்து வீடுபேற்றிற்கு உதவும் எட்டுவகை பொருட்களான ஆன்மாவாகிய தான், சதாசிவமாகிய இறைவன், பதி, பசு, பாசம், முன்வினைப்பயன், நல்வினை, தீவினை, குற்றமற்ற வீடுபேறு என்பனவற்றை சிந்தித்து, ஞானத்தால் எல்லாம் சிவனே என்று சிந்தையைத் தெளிவித்துப் பசுவிற்குத்தான் பாசத்தொடர்பு ஏற்படும் என்பதனையும், பதியாகிய இறைவனுக்குப் பாசம் கிடையாது என்பதையும் உணர்ந்து. மனித நிலையிலிருந்து உயர்ந்து சிவத்தன்மை அடைந்து சிவபோகத்தில் திளைப்பது மார்க்க சைவம் எனப்படும். அதாவது ஆகமக் கருத்துக்களை உணர்ந்து வீடுபேற்றைச் சிந்தித்தல் மூன்றாம் நிலையாகும். திருமந்திரம் பாடல் 1427



"பொன்னால் சிவசாதனம் பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனம்
துன்மார்க்க சாதனம் தோன்றாத சாதனம்
சன்மார்க்க சாதனமாம் சுத்த சைவர்க்கே"

பொன்னால் செய்யப்பட்ட உருத்திராக்க மாலை, விபூதிப் பூச்சு அணிந்து, நன்னெறியில் செலுத்தும் "நமசிவாய" மந்திரம் செபித்தல், சைவ சித்தாந்த நூலறிவு பெறுதல், தீயவர்கள் சேர்க்கையை விட்டொழித்து நல்லவர்களுடன் பழகுதல் இவையே சன்மார்க்க வழி நடக்கும் சுத்த சைவர்களுக்கு உரிய அடையாளமாகும்.

4. கடுஞ்சுத்த சைவம்- ஞானநிலையில் ஆடம்பரம் ஏதுமின்றி தான் அவனாய் நிற்கும் நிலை கடுஞ்சுத்த சைவம். இவர்களுக்கு புறச் சின்னம் ஏதுமில்லை. மனத்தால் பாசத்தையும், ஆடம்பரத்தையும் நீத்தவர்கள். சிவஞானத்தை மட்டுமே விரும்புபவர்கள். ஐங்கோசங்களையும், ஆறாதாரங்களையும், கடந்து சுத்த மாயையும் நீத்து, பிறவிக்குக் காரணமான பாசங்களையும் விட்டு, தம்மைத் தாம் அறிந்துகொள்வர்.

ஆகமங்கள் குறிப்பிடும் பதமுத்திகளில் சேராதவர்கள். பிரணவப் பொருளான இறைவனைப் பரமுத்தியால் அடைவர். அதாவது சமயசிந்தனைகளை நீக்கிப் புறச்சின்னங்கள் அணியாது மனத்தினால் இறைவனை நினைத்து பரமுத்தி உணர்ந்து, சாயுச்சிய நிலை பெற்று இறைவனோடு இரண்டறக் கலந்து சீவன் சிவனாதல் நான்காம் நிலையாகிய இறுதி நிலையாகும். திருமந்திரம் பாடல் 1438

வேட்ம் கடந்து விகிர்தன்தன் பால்மேவி
ஆடம்பரம் இன்றி ஆசாபாசம் செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடும் சிவபோதகர் சுத்த சைவரே"

உடலில் அணிந்து கொள்ளும் சிவச் சின்னங்களாகிய புற வேடங்களை விட்டுவிட்டுப் பரம்பொருள் தியானத்தில் ஈடுபட்டு, பகட்டான தோற்றம் நடைஉடைகள் இல்லாமல் ஆசைகள் பந்தபாசங்களை விட்டொழித்து, துன்பப் பிறவிக்குக் காரணமான அகப் பற்றுக்களால் ஆன்மாக்கள் அழிவதைத் தடுத்து அவை அண்டாமல், சிவத்தைச் சிந்திக்கும் சிவஞானம் பெற்றவரே சுத்த சைவராவார்



Gopara Gnanam GMBH
அனைவருக்கும் எங்கள் இனிய காதலர்தின வாழ்த்துக்கள்
மாங்கையர் மனங்கவரும் சேலைகள்
ஆடவர்களுக்கான ஆடைகள்
திருமணப் பட்டுப்புடவைகள்
சிறுவர்களுக்கான ஆடைகள்
தங்க நகைகள்
அனைத்தும், தரமாகவும் மலிவாகவும், ஒரே இடத்தில் பெற்றுக்கொள் நாடுங்கள்.
Tel: 0231/5450028 Mob: 01713306542
Rheinische Str.81 44137 Dortmund


மித்திரன்
திருமண இலவச சேவை
உங்கள் இல்லற வாழ்வின் உற்ற துணையை
உறுதியாகத் தேடிக்கொள்ள உதவும் இலவச சேவை நமது.
தொடர்புகளுக்கு:
மித்திரா:
Tel: 02732 57372- Mobil: 0175 4543 416

# நெஞ்சம் மட்டும் பேசும் காதல்



கௌசி

நிற்பனவும், நடப்பனவும், பறப்பனவும் தமது மனங்களைப் பகிர்ந்து கொள்ளும் இயல்பான நிகழ்வு காதல். மனிதவளர்ச்சியில் சத்தியமானதும் சாத்தியமானதும் காதல். மனதுக்குள் கிளுகிளுப்பையும் உடலிலே மாற்றத்தையும் நடத்தையில் நாகரிகத்தையும், பேச்சிலே கவர்ச்சியையும் கொண்டுவரும் காதல். இக் "காதல் இல்லையேல் சாதல் சாதல்" என்றார் மகாகவிபாரதி. "காதலித்துப்பார் உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும்" என்றார் வைரமுத்து. "கண்ணும் கண்ணும் மோதுமம்மா நெஞ்சம் மட்டும் பேசுமம்மா காதல், ஆணுக்கும் பெண்ணுக்கும் அன்பையையே போதிக்கும், ஜாதகங்கள் பார்ப்பதில்லையே அது காசு பணம் கேட்பதில்லையே" என அகத்தியன் அவர்கள் தன் வரிகளில் காதலை விபரித்தார். "யாயும் ஞாயும் யார் ஆகியரோ எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர். யானும் நீயும் எவ்வழி அறிதும்? செம்புலப்பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"(என் தாயும் உன் தாயும் எவ்வித உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவுடையவர்கள்? நானும் நீயும் எந்தக் குடி சார்புடையவர்கள்? செம்மண் நிலத்திலே விழுந்த மழைநீர் போல அன்புள்ள நெஞ்சம் ஒன்றாகக் கலந்தன) என குறுந்தொகையிலே செம்புலப்பெயல் நீரார் பாடுகின்றார்.

இவ்வாறு இரு மனங்களிடையே காதல் எவ்வாறு தோன்றுகிறது? எதிர்பார்ப்புக்கள், ஆசைகள், விருப்புக்கள், ஆர்வங்கள், ஈர்ப்புக்கள், உடலமைப்புக்களின் கவர்ச்சி போன்றவை இருமனங்களுக்கிடையிலே காதலை உருவாக்குகின்றன. இருவருக்கிடையில் அளவுகடந்த அன்பு தோன்றும் போது ஒக்சிரோசின் (oxytocin) என்னும் ஓமோன் மூளையில் சுரக்கும். இந்த ஓமோன் சுரப்பதற்கு எதிர்ப்பால் கவர்ச்சி ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது.

பெண்களுக்குரிய ஈஸ்ரோஜன் (Estrogen) என்னும் ஓமோன் பெண்மையையும் மென்மையையும் வழங்க ஆண்களின் ரெஸ்ரோஸ் ரெறோன் (Testosterone) என்னும் ஓமோன் ஆண்மையையும் வலிமையையும் கொடுக்கின்றது. இவ்விரு ஓமோன்களும் சரியான வகையில் தொழிற்படும்போது இரு பாலாரிடையும் அவரவர் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப கவர்ச்சியான உடலமைப்பு தோன்றுகின்றது. இவ்வாறான உடலமைப்புக்கள் ஏற்படுகின்றபோது இருபாலாரிடமும் காணப்படும் அன்டரோஜன் (Androgen) என்னும் ஓமோன் இருபாலாரிடையும் கவர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இக்கவர்ச் சியானது ஆழமான அன்பை ஏற்படுத்தும்போது ஒக்சிரோசன் என்னும் ஓமோன் மூளையில் சுரக்கின்றது. இவ்வாறு உடலுள்ளே ஓமோன்களின் மாற்றத்தினால் ஏற்படுகின்ற உள்ளுணர்வு ஒத்த அன்பினரான இரு மனங்களை ஒன்றிணைக்கின்றன.

இக்காதலைப் பெருமைப்படுத்தி 14ம் திகதி மாசிமாதம் எடுக்கப்படுகின்ற திருநாளே காதலர் தினமாகும். இது வலன்ரீன்ஸ் நாள் ஏயடயவெைளெவயப என்றும் அழைக்கப்படும். இத்தினத்தில் காதலர்கள் அவரவர் தமது காதல் துணைக்கு ரோஜா மலர்கள், வாழ்த்து அட்டைகள் கொடுத்தும், சொக்லட் . பரிசாகக் கொடுத்தும் கொண்டாடுவார்கள். சொக்லட்டினுள் சக்தியை அதிகரிக்கச் செய்யும் தியோப்ரோமைன் என்னும் அல்கலொய்ட் (Alkaloid) இருக்கிறது. உடலையும் மூளையையும் தூண்டிவிடக்கூடிய கோப்பியிலுள்ள கொப்.:.ய்ன் (Coffeine) கூட ஒரு அல்கலொய்ட் தான். காதல் தாகம் அதிகரிக்க அல்கலொய்ட் அதிகமுள்ள சொக்லட் உதவுகின்றது. இதனை விட இதயத்துடன் தொடர்புடைய காதலுக்கு இதயத்தை வலிமைப்படுத்தும் தன்மையுடையது சொக்லட் என கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆய்வுசெய்து கூறியிருக்கின்றது. சொக்லட்டினுள் இருக்கும் அன்ரி ஒக்சிடென்ட் (Antioxidant) இதயநோய், பக்கவாதம் ஏற்படும் அபாயத்தைத் தடுக்கின்றது. அதனால் இதயத்தை வலிமைப்படுத்தக் கொடுப்பதுதான் கொடுக்கின்றீர்கள். கறுப்பு சொக்லட்டை (Dark chocolate ) கொடுங்கள். ஏனென்றால், அதனுள் இருக்கும் கொக்கோவா (cocoa) சர்க்கரை வியாதி, அதிகரிக்கும் கலோரிகளை இல்லாமல் செய்துவிடுகின்றது. அதனால், கறுப்பு சொக்லட்டே உங்கள் காதலுக்கு உகந்தது என்பது தெளிவாகிறது.




இவவாறு பிரபலமாகவும் ஆடம்பரமாகவும் கொண்டாடுகின்ற இத்தினம் எவ்வாறு ஆரம்பமானது என்றால், உண்மையில் ரோமர்களின் ஆட்சிக்காலத்திலேயே காதலர்தினம் ஆரம்பிக்கப்பட்டது. ரோமாபுரி நாட்டிலே படையில் சேர விரும்புபவர்கள் யாரும் திருமணம் செய்யக்கூடாது. இதை மீறுபவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என மன்னன் கிளாடிஸ் மிமி அறிவித்தான். ஆனால், பாதிரியார் வாலண்டைன் இதனை அறிந்து இரகசியத் திருமணம் படைவீரர்களுக்குச் செய்து வைத்தார். இதனையறிந்த மன்னன் பாதிரியார் வாலண்டைனைச் சிறையில் அடைத்தார். சிறையில் இருந்த பாதிரியார் வாலண்டைனுக்கும் சிறைக்காவலாளிகளின் தலைவன் மகள் அஸ்டோரியஸ் இற்கும் இடையில் காதல் பிறந்தது. இதனை அறிந்த இவள் தந்தை அஸ்டோரியஸை வீட்டுக்காவலில் வைத்தார். அப்போது வாலண்டைன் அஸடோரியஸ் இற்கு ஒரு செய்தி அனுப்பினார். இக்கடிதம் படிக்கும்போது வாலண்டைன் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்டார்.

இத்தினம் பிப்ரவரி 14. அதன் பின் ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டுக்குள் ரோம் வந்ததன்பின் இத்தினம் விடுமுறைதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. சுமார் 200 ஆண்டுகளுக்குப் பின் ஜெலாசியஸ் மி என்னும் போப்பாண்டவர் என்பவர் வாலண்டைனைப் புனிதராக அறிவித்தார். அதன்பின் இத்தினம் வாலண்டைன தினமாகக் காதலர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

காலம் காலமாகக் காதலுக்கு விழா எடுப்பதற்கான காரணம்



# 14வது ஆண்டில்
## ஐரோப்பியத் தமிழ் வானொலி
## உறவுகளின் ஒருங்கிணைவு

எமது வானொலி 13 ஆண்டுகளை நிறைவு செய்து 14வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இனிய பொழுதை, வானொலியின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக நின்றஉறவுகளுடன் கொண்டாடி மகிழ்கிறோம்!

இந்நிகழ்வில் தங்களையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கிறோம்!...

ETR
www.etr.fm

**24.02.2018**
**சனிக்கிழமை மாலை 15:00முதல்**
**Alte Bahnhofstr. 182, 44892 Bochum**

Warendorf மாவட்டத்தில்
**மாபெரும் அங்காடி**

# M point Supermarkt

M POINT Supermarkt

e.mail: mpointsupermarkt@yahoo.de




உடனுக்கு உடன் இறக்குமதி
செய்யப்பட்ட
மரக்கறிவகைகள்
கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப்
பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்

துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER

Email : shansure7480@yahoo.de







Catering & Partyservice





M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )

Tel: 02583 30 30 300 0179 48 555 54

# கிராமத்துப் பெண் இவள்

வன்னியான் பூனகர் இரவி



வானம் காக்கக் கூரை
மானம் காக்க வேலி
போதைஏற்றக் கள்ளு
போதை இன்றிக் குடிக்கப் பத நீர்
பாதை திறக்கப் படலை
கூழ் ருசிக்கப் பிளா
கள் வடிக்கப் பன்னாடை
கொட்டித்தின்னத்தட்டுவம்
மீனுக்கு பறி.பூனைக்கு உறி
வெக்கை அடித்தால் விசிறி
குளிர் காய விறகு
ருசித்துச் சுவைக்க நுங்கு
சூப்பி ருசிக்க பனாட்டு
ஊதக்குழல் .உண்ணக் கிழங்கு
உறங்கப்பாய்
அவித்துக் காய்ந்தால் புளுக்கொடி
அவியாமல் காய்ந்தால் ஒடியல்
பானை சுமக்கச் சிம்மாடு
சட்டி வைக்கத் திருவனை
முளைவிடும்போது பூரான்
பூரான் சுவைத்த பின் ஊமல்
முற்றம் கூட்டவும் விளக்குமாறு
முறை தவறினாலும் விளக்குமாறு
பொத்தி வைக்க பெட்டி
பொருள் சுமக்கக்கடகம்
வண்டிக்குத் துலா.வாச்சிக்குப் பிடி
பட்டை தைக்க நூல்
படல் இறுக்க நார்
காதலுக்கும் மறைவு
கழிவிடத்திற்கும் மறைவு
எதிரியைப் பார்க்க உயரம்
எதிர்த்து நிற்க அரன்
எரிக்கப் பொச்சு
திரிக்கத் தும்பு
தின்ன வெல்லம்
வெள்ளம் இறைக்கப் பட்டை
நீரோடப் பீலி

நீர் அள்ளிஇறைக்கக்கோணி
நடை பழகத் தள்ளு வண்டி
நடை தளரச்சாக்குக்கட்டில்
பழுக்கு முன் நுங்கு
பழுத்து விழுந்தால் பனம்பழம்
மாடும் சூப்பும் மனிதனும் சூப்புவான்
வெல்லம் ஊத்தக்கருப்பெட்டி
பணம் வைக்கக் கொட்டப்பெட்டி
களம் அடிக்கக் களப்பாய்
விதை நெல் காக்கக் கூடை
கட்டி ஏறத்தளநார்
கத்தி வைக்க யனக்கூடு
காக்கையை.கிளியை
தூக்கணாம்குருவியை
காத்து நிற்கும்
சரணாலயம்
வீட்டிற்கு முகடு
வெய்யிலுக்கு நிழல்
பல்லாக்கும் நான் தான்
பாடையும் நான் தான்
நீ செத்தால் பிணம்
நான் செத்தால் உன்வீட்டிற்கு வளை
அடி இருந்து முடி வரை உனக்காக நான்
உன்னை விட மூத்தவள்
உன்னை விட உயர்ந்தவள்
என்னை நீ அழிப்பது உன் இனத்தை
அழிப்பதற்கு ஒக்கும்.
எண்ணித் துணிக
நான் கிராமத்துப் பெண்.



"புங்குடுதீவு - சிதைவுறும் நிலம்"
இந் நிகழ்வில் "புங்குடுதீவு - சிதைவுறும் நிலம்" ஆவணப்படமும் திரையிடப்பட்டு, அது பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

ஸ்ரீ காளிகாம்பாள் ஜோதிட நிலையம்



அனைத்து மதங்களும் வரவேற்கப்படுகின்றன..
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்.
பண்டித் சாய்ராம்
பரம்பரை பரம்பரையாக தலைமுறையில் சாய்ராம் தங்கள் கடந்த காலம் , நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் பற்றிக் கணித்தல், முகம்பார்த்து உங்கள் எதிர்காலம் சொல்வார்.
மற்றும் முகநாடி கைரேகை ஆகியவற்றிலும் வல்லுனர்.
for Appt.0049 (0)231 86220 828
0049(0)15163222251 and 0049(0)15218133859
"காத்திரு. எழுந்திரு இலக்கை அடையும்வரை நிறுத்த வேண்டாம்"
பண்டித் சாய்ராம் முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தைக் கணிப்பார் அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும். திருமணப் பொருத்தம், அதிஷ்ட இலக்கம், அதிஷ்ட மோதிரம் ஆகியவையும் செய்துதரப்படும்.
வேதத் தீர்வுகள்:
மொழிகள்: தமிழ் இந்தி ஆங்கிலம்.
1. வேலை வாய்ப்பு
2. பணப் பிரச்சினைகள்
3. காதல்
4. வியாபாரம்
5. திருமணப் பிரச்சினைகள்
6. உடல் நலம்
7. குழந்தைப் பிரச்சினைகள்
8. மன அழுத்தம்/ நோய்
9. பொறாமை
10. கல்வி
11. கணவன், மனைவி பிரச்சினை
12. வெளிநாடு
13. விவாகரத்து
14. பில்லி, சூனியம்
15. தாம்பத்யம்
16. பகை
17. நீதிமன்ற வழக்குகள்
18. துர் அதிஷ்டம்
மற்றும் உங்களது தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பல....
100% செய்வினை மற்றும் பில்லி, சூனியத்திடமிருந்து
வாழ்நாள் முழுவதற்குமான துரித தீர்வு
08:00 am to 8.00 pm Private and confidential
Borsigstraße 68,44145 Dortmund (Borsigplatz)

பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்
நடாத்தும்
நூல் வெளியீடும் கலந்துரையாடலும்



க.வாசுதேவனின் „பிரஞ்சுப் புரட்சி" நூல் வெளியீடும்
நூலாசிரியருடனான கலந்துரையாடலும்



இடம்: தமிழர் அரங்கம்,
Rheinische Str 76 - 80
44137 Dortmund
காலம்: 11.02.2018
ஞாயிற்றுக் கிழமை
மு.ப. 11 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
Fahrschule- hk- hammacher.de



ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF FES இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!




# நிறம் மாறும் ஏரி


கே.எஸ்.சுதாகர்



Blue Lake - June



Blue Lake - October



Blue Lake - December

ஊர் சுற்றிப் புராணம்  தெற்கு அவுஸ்திரேலியா

தெற்கு அவுஸ்திரேலியாவின் மவுன்ற் கம்பியர் பகுதியில் இந்த நீலநிற ஏரி *(BLUE LAKE)* அமைந்திருக்கின்றது. அடிலையிட்டிலிருந்து 4 மணி 30 நிமிட கார் ஓட்டத்தில் இந்த இடத்தை அடைந்துவிடலாம்.

எரிமலை வெடிப்பினால் உருவான பள்ளமாக இன்னமும் மவுன்ற் கம்பியரில் காட்சி தரும் இந்த ஏரி - மார்கழியில் இருந்து பங்குனி வரை நீலநிறமாகவும், சித்திரையிலிருந்து கார்த்திகை வரை கரும் சாம்பல் நிறமாகவும் காட்சி தரும்.


இந்த அதிசய நிறமாற்றம் ஏற்படுவதற்கு - எரிமலைப்படிவுகள், கல்சியம் கார்பனேற் மற்றும் ஏரியில் உள்ள நீரின் வெப்பநிலை மாற்றமடைதல் என்பவற்றைக் காரணமாகக் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த ஏரியில் இருந்துதான் நகரத்திற்கான குடிநீர் விநியோகமும் நடக்கின்றது. ஏறத்தாழ 72 மீற்றர் ஆழமும், 170 ஏக்கர் மேற்பரப்பையும் இது கொண்டுள்ளது. புரியாத புதிராக விளங்கும் இந்த ஏரி அற்புதமான அழகைக் கொண்டுள்ளது.



# ஒருநிமிஷம் தலைசுத்திருச்சு!

## அரசியலில் அதிரடி கிளப்பும் ரஜினிகாந்த்தின் சொத்து மதிப்பு இதுதான்..!



ரஜினிகாந்த்தின் தற்போதைய சொத்து மதிப்பு 360 கோடி ரூபாய் என்று ∴பின்ஆப் வெளியிட்டுள்ளது.
இதுவே ரஜினியின் பிரபலத்தினை வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் இவரது சொத்து மதிப்பு என்பது மிகவும் அதிகமாக உயரும். ரஜினிகாந்த்தின் வருவாயில் குறிப்பிட்ட அளவிலான பங்குகள் தொண்டு நிறுவனங்களுக்குச் செல்வதாகக் கூறப்படுகிறது, அதே நேரம் தான் நடித்த படம் சரியாக வசூலிக்கவில்லை என்றால் தயாரிப்பாளருக்கு குறிப்பிட்ட அளவிலான பணத்தினைத் திரும்பவும் அளிப்பார் என்பது அனைவருக்கும் தெரியும்.
சொத்து ஆதாரம்

சொத்து ஆதாரம் ரஜினியின் சொத்து மதிப்பு என்பது திரைப்படத்தில் இருந்து வரும் ஊதியம், வீடு மற்றும் தனிப்பட்ட முதலீடுகள் போன்றவற்றினை வைத்துக் கணக்கிடப்பட்டதாக ∴பின்ஆப் தெரிவித்துள்ளது. ரஜினிகாந்த் விளம்பரங்களில் நடிப்பதில்லை என்றாலும் இந்தியா மட்டும் இல்லாமல் உலகளவில் பிரபலமான நடிகராக உள்ளார் மொத்த சொத்து மதிப்பு மொத்த சொத்து மதிப்பு சராசரியாகத் திரைப்படத்தில் இருந்து கிடைக்கும் வருவாய் 55 கோடி எனவும், முதலீடுகள் மூலமாக 110 கோடி ரூபாய், ஆடம்பர கார்கள் 3 க்கும் சேர்ந்து 2.5 கோடி ரூபாய், ஆண்டுக்கு வருமான வரி 13 கோடி என இவரது சொத்துக்கள் மதிப்பிடப்பட்டுள்ளது. வீடு வீடு சென்னை போயஸ்கார்டனில் உள்ள தனது வீட்டை 2002-ம் ஆண்டு ரஜினி வாங்கியுள்ளார். இதன் தற்போதிய மதிப்பு என்பது 35 கோடி ரூபாய் எனக் கூறப்படுகிறது. கார்கள் கார்கள் பிற நடிகர்கள் மற்றும் பிரபலங்கள் போன்று 10க்கும் மேற்பட்ட ஆடம்பர கார்கள் ரஜினியிடம் இல்லை.

ரேன்ஞ் ரோவர், பெண்ட்லி, மற்றும் டொயோட்டா இன்னோவா என்றும் மொத்தம் மூன்று ஆடம்பர கார்கள் மட்டுமே இவர் பயன்படுத்தி வருகிறார்.
கடந்த 5 ஆண்டுகள் வருவாய் கடந்த 5 ஆண்டுகள் வருவாய் ஆண்டு வருவாய் 2016 ரூ. 65 கோடி 2015 ரூ. 5.5 கோடி 2014 ரூ. 35 கோடி 2013 ரூ. 60 கோடி 2012 ரூ. 49 கோடி ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு 1950-ம் ஆண்டுக் கர்நாடகாவில் ராமபாய் மற்றும் ராமோஜி ராவ் கெய்க்வாட் என்பவர்களுக்கு 4வது மகனாகப் பிறந்தவர் தான் சிவாஜி ராவ் கெய்க்வாட். தனது 5 வயதில் தாயினை இழந்தார்.

படிப்பு பெங்களூரில் உள்ள ஆச்சார்யா பட்டாசலாவிலும் பின்னர் ராமகிருஷ்ணா மிஷனின் ஒரு பிரிவான விவேகானந்தா பாலக் சங்கத்திலும் அவர் கல்வி பயின்றார். மராத்தி தான் தாய் மொழி என்றாலும் அதில் எந்தத் திரைப்படமும் இவர் நடிக்கவில்லை.
நடிப்பு

திரைப்படத்தில் நடிக்கும் முன்பு பல கடினமான வேலைகளைச் செய்தவர் முக்கியமாகப் பேருந்து நடத்துநராக இருந்துள்ளார். அதே நேரம் பல மேடை நாடகங்களிலும் நடித்துள்ளார். திரைப்பட வாழ்க்கை திரைப்பட வாழ்க்கை 1990களில் இவர் நடித்த படங்கள் எல்லாமே வெற்றி என்று கூறலாம். இவர் நடிப்பில் வெளியான அனைத்துப் படங்களும் மிகப் பெரிய வெற்றியை இவருக்குத் தேடித்தந்தன.
சிபிஎஸ்ஈ பாட புத்தகத்தில் பேருந்து நடத்துனராக இருந்து எப்படிச் சூப்பர் ஸ்டார் ஆனார் என்று இவரைப் பற்றிப் பாடமும் உள்ளது. இந்தியாவில் இருந்து சிபிஎஸ்ஈ பாட புத்தகத்தில் இடம்பெற்ற முதல் நடிகர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர் ஆக உள்ளார்.
குடும்பம் குடும்பம் சென்னை எத்திராஜ் கல்லூரியில் இருந்து தன்னைப் பேட்டி எடுக்க வந்த லத்தா ரங்காசாரி என்பவரைத் திருமணம் செய்தார். இவருக்கு ஐஷ்வர்யா மற்றும் சவுந்தரியா என்று இரண்டு மகள்கள். இவரது மனைவி 'தி ஆஷ்ரம்" என்ற பள்ளியை நடத்து வருகிறார். அரசியல் அரசியல் 1995-ம் ஆண்டுப் பிரதமர் பி.வி நரசிம்ம ராவைச் சந்தித்த பிறகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆதரித்தர். பின்னர் ஒரு நேரம் தமிழகத்தில் திமுக-ஐ ஆதரித்துள்ளார்.
மேடைகளில் நேற்று நான் பேருந்து நடத்துனர், இன்று நான் நடிகன் நாளை நான் யார் என்பதைக் கடவுள் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறி வந்தவர் தற்போது (31.12.2017) அரசியல் கட்சி துவங்க உள்ளார். தமிழகம் வலைத்தளங்கள் எங்கும் பேச்சானது. ஆகியது மட்டும் இல்லாமல் தமிழக மக்கள் அனைவரும் ரஜினியின் அரசியல் வருகை குறித்துத் தான் பேசி வருகின்றனர். தி ஆஷ்ரம் தி ஆஷ்ரம் சென்ற மாதம் லதா ரஜினிகாந்த் நடத்தி வரும் தி ஆஷ்ரம் பள்ளிக்கு வாடகை அளிக்கவில்லை என்று புகார் வந்துள்ளது.

பள்ளிக்காக வாடகைக்கு இடம் அளித்தவருக்கு வருமான வரித் துறையிடம் இருந்து நோட்டிஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதில் பள்ளி வாடகையில் இருந்து வரும் வருவாய்க்கு வரி செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர். அதற்கு இடத்தின் சொந்தக்காரர் லதா ரஜினிகாந்த் வாடகை செலுத்தவில்லை என்று கூறிய நிலையில் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.
நதி நீர் இணைப்பு நதி நீர் இணைப்பு நதி நீர் இணைப்பிற்கு ரஜினிகாந்த் ஒரு கோடி ரூபாய் அளிப்பதாகக் கூறி அதனைத் தற்போது வரை அளிக்கவில்லை என்றும் வட்டியுடன் சேர்த்து 5 கோடி அளிக்க வேண்டும் என்றும் அய்யாகண்ணு அண்மையில் கோரிக்கை வைத்துள்ளார். அரசியல் என்றால் இது எல்லாம் சகஜயம்தான் என்று கவுண்டாமணி சொல்வது எங்கோ கேட்கிறதே.




ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte





# அஜித்தின் விசுவாசம்!



கடந்த ஆண்டு வெளிவந்த "விவேகம்" திரைப்படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இதனால், சிவா மீது அதிருப்தியில் இருந்தனர் அஜித் ரசிகர்கள். அஜித் மீண்டும் சிவா இயக்கத்தில் நடிக்கக்கூடாது எனக் கருத்துகளைத் தெரிவித்து வந்தனர். ரசிகர்கள் கருத்துக்கு மதிப்பில்லை? ரசிகர்கள் கருத்துக்கு மதிப்பில்லை? ஆனால், ரசிகர்களின் விருப்பத்திற்கு மாறாக நான்காவது முறையாக இணைந்தது அஜித் - சிவா கூட்டணி.

இருவரும் இணையும் இப்படத்திற்கு "விசுவாசம்" என டைட்டில் வைக்கப்பட்டது. ரசிகர்களின் கருத்துகளுக்கு அஜித் மதிப்புக் கொடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது. காரணம் என்ன காரணம் என்ன இதுகுறித்து அஜித் தன் நட்பு வட்டாரத்தில் கூறுகையில் "சிவா எனக்கு ஹிட் படங்களையும் கொடுத்துள்ளார். அவர் வேறு ஒருவ்ருடன் படம் இயக்கச் செல்லும் போது வெற்றிப்பட இயக்குனர் என்ற பெயரோடு தான் செல்ல வேண்டும். அதற்காகத் தான் இந்த வாய்ப்பு" என்று கூறினாராம். நெகிழ்ச்சி நெகிழ்ச்சி பல கட்ட கதைப் பேச்சுவார்த்தைக்கு பிறகு தர்ன் சிவாவை கமிட் செய்துள்ளாராம் அஜித். அஜித் மீண்டும் ஏன் சிவாவுக்கு வாய்ப்பு கொடுத்தார் என அதிருப்தியுடன் இருந்தவர்களுக்கு அஜித் சொன்ன காரணம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது




## பாட்டு எழுதியவர் குடும்பத்திற்கே பாட்டால் வரும் பணத்தைக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆரின் 'நாடோடி மன்னன்' படத்தில், 'தூங்காதே தம்பி தூங்காதே....', ' அரசிளங் குமரி" படத்தில் 'சின்னப் பயலே... சின்னப் பயலே சேதி கேளடா...' போன்ற கருத்தாழம் மிக்க பாடல்களை எழுதியவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். 1959-ம் ஆண்டு அக்டோபர் 8-ம் தேதி இளம் வயதிலேயே அவர் மறைந்துவிட்டார்.

அவரது குடும்பத்தினருக்கு பண உதவி செய்து ஆறுதல் கூறிய எம்.ஜி.ஆர்., 'நாடோடி மன்னன்' படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில் அந்தப் படத்தின் பாடல்கள் ரெக்கார்டு உரிமையை அவர்களுக்கே கொடுத்துவிட்டார்!பாட்டு எழுதியவர் குடும்பத்திற்கே அதனால் வந்த பணம் சொந்தமானது.

## அன்னக்கிளி உன்னைத் தேடிவரும் விருதுகள்.





"அன்னக்கிளி" பாடல் பதிவின்போது, இளையராஜாவுடன் பட அதிபர் பஞ்சு அருணாசலம், "அன்னக்கிளி" கதாசிரியர் செல்வராஜ்.

### பத்மவிபூஷண் இளையராஜா

இளையராஜா இதுவரை பெற்ற பத்ம விருதுகள் என்னென்ன?

இசைஞானி இளையராஜாவுக்கு இந்த ஆண்டுக்கான பத்ம விபூஷண் விருது வழங்கப்படுகிறது. இந்நிலையில் அவர் இதுவரை பெற்ற விருதுகளை என் னென்ன என்பதை குறித்த விவரங்களை பார்ப்போம்.

இந்தியாவின் சிறந்த திரைப்பட இசையமைப்பாளர்களுள் ஒருவராக வலம் வந்தவர் இளையராஜா. அன்னக்கிளி என்ற திரைப்படத்துக்கு இசை அமைத்ததன் மூலம் 1976 இல் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானார். இதுவரை 1000 க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். இவருக்கு இந்திய அரசின் படைத்துறை-சாரா விருதுகளில் மூன்றாவது உயரிய விருதான பத்ம பூஷண் விருது 2010-ஆம் ஆண்டு அளிக்கப்பட்டது.

தமிழக நாட்டுப்புற இசை, கர்நாடக இசை மற்றும் மேற்கத்திய இசையில் புலமையும் முறையான பயிற்சியும் பெற்றவர். சிறந்த இசையமைப் பாளருக்கான தேசிய விருதை நான்கு முறை பெற்றுள்ளார். திரைப் படங்களுக்கான சிறந்த பின்னணி இசையமைப்புக்கும் பெயர் பெற்றவர்.

இதுவரை இளையராஜாவுக்கு கிடைத்த விருதுகளின் பட்டியல்: தமிழக அரசின் கலைமாமணி விருதை பெற்றவர். 1988-ஆம் ஆண்டு மத்திய பிரதேச அரசின் லதா மங்கேஷ்கர் விருது 1995ஆம் ஆண்டு கேரள அரசின் விருது இசையில் சாதனை புரிந்ததற்காக 1994-ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழகத்தினாலும், 1996ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினாலும் முனைவர். டாக்கடர் பெற்றவர்.

2010-இல் பத்ம பூஷண் விருது. இளையராஜா, இந்திய அரசின் இசைக்கான தேசிய விருதினை ஐந்து முறைப் பெற்றுள்ளார். அவருக்கு விருதினைப் பெற்றுத் தந்த படங்கள், 1985இல் - சாகர சங்கமம் (தெலுங்கு) 1987இல் - சிந்து பைரவி (தமிழ்), 1989இல் - ருத்ர வீணை (தெலுங்கு), 2009இல் - பழஸிராஜா (மலையாளம்), 2016இல் - தாரை தப்பட்டை (பின்னணி இசை) ஆகியன ஆகும். தற்போது நாட்டின் 2-ஆவது உயரிய குடிமகன் விருதான பத்மவிபூஷண் விருதை 2018-ஆம் ஆண்டுக்காக பெறுகிறார். இசைஞானி. அன்னக்கிளி உன்னைத் தேடிவரும் விருதுகள்.




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744 HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
VALUTRANS
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிடேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
சரவண பவன்
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Rabeena
Rabeena தயாரிப்புக்களின்
யேர்மனிக்கான ஏக விநியோகஸ்த்தர்
Kipper Str.3 44147 Dortmund Germany